விலை ரூபா: 5.00 பக்கங்கள் எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

றெனி ஷூக்குக் கண்ணாடி அகம்

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்

540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


RENNY

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 06 திங்கட்கிழமை (18.02.2002) தொலைபேசி 3378 ஒலி 61

## தமிழீழக் கோரிக்கையை கைவிடும் சூழ்நிலை இன்றுவரை ஏற்படவில்லை

### அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பேட்டி

(கொழும்பு)



சிறீலங்கா அரசு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் கட்டத்தில் முன்வைக்கப் போகும் பெறுமதியான தீர்வைப் பொறுத்தே தமிழீழக் கோரிக்கை தொடர்பான தமது நிலைப் பாட்டை வெளியிடுவோம் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்த தமிழ்ச்செல்வன் அப் பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நிரந்தரப் போர்நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு அதன் மூலம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் போதே தீர்வுத் திட்டங்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டை தெரிவிப்போம். தற்பொழுது உள்ள நிலைமை வரை தமிழீழக் கோரிக்கையை கைவிடுவதற்கான சூழ் நிலை எமக்கு ஏற்படவில்லை.

இனப் பிரச்சினைக்கு அரசாங்கம் முன்வைக்கப்போகும் தீர்வு எவ்வகையானது என்பதைப் பொறுத்தே எமது தமிழிழக் கோரிக்கை தொடர்பான நிலைப் பாட்டை தெளிவுபடுத்துவோம். முன்னைய ஆட்சியாளர்களை போலல்லாது பிரதமர் ரணில் சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் கொண்டிருப்பதை நான் வரவேற்கின்றேன். இன்று எமது அமைப்பை பலம் மிக்கதொரு சக்தியாக மாற்றியது வீரச்சாவடைந்த போராளிகளின் தியாகமும், பொதுமக்களின் பங்களிப்புமே. இதனை இலகுவில் மறந்து விடமுடியாது என்றும் அவர் அப் பேட்டியில் தெரிவித்துள்ளார். (இ)

## மட்டக்களப்பில் 20 ம் திகதி பொங்கு தமிழ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொங்கு தமிழ் நிகழ்வு நாளை மறுதினம் 20ம் திகதி உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 20ம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வின் ஓராண்டு நிறைவை நினைவு கூரும் வகையில் மட்டக்களப்பு கோட்டை மைதானத்தில் இந் நிகழ்வு இடம் பெறவுள்ளது. இந் நிகழ்வில் கிழக்குப் பல்கலைக் கழக சமூகம், கிழக்கு மாகாண மாணவர் சமூகம், வர்த்தக சமூகம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் ஏனைய அமைப்புக்கள் கலந்து கொள்ளவுள்ளன. (ந-4)

யுத்த நிறுத்த உடன்பாடு 24ந் திகதிக்குள் சாத்தியப்படலாம்

# புலிகளின் தடையை நீக்காமல் அரசுடன் பேசப்போவதில்லை !

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உறுதிபடத் தெரிவிப்பு

(நமது நிருபர்)



**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீது இலங்கை அரசு விதித்துள்ள தடை நீக்கப்பட்டு, விடுதலைப் புலிகள் அமைப்பை தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்று எமக்கு சட்டபூர்வமான - சமத்துவமான அந்தஸ்து வழங்கப்பட்டால் அன்றி நாம் எந்தவித பேச்சுக்களிலும் பங்குபற்றப்போவதில்லை இது எமது உறுதியான நிலைப்பாடாகும்.**

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித் ... யான, நிரந்தரமான அமைதி நிலை உருவாக வேண்டும் அதற்கு இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உறுதியான ... இம் மாதம் 24ம் திகதிக்கு முன்னர் கைச்சாத்தாகலாம் என நம்புகிறோம். நிரந்தரமான அமைதி நிலை பேச்சுவார்த்

## மாலைதீவில் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை

### அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(வவுனியா)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை ஏப்ரல் மாதம் மாலைதீவில் நடைபெறும் என்ற செய்தியை தமிழீழ விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் எதிர் வரும் ஏப்ரல் மாதம் 16ம் திகதி அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது என வெளியான செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லை அச்செய்தி தவ

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

***போர் நிறுத்த உடன்பாடு 24ற்கு முன் ஏற்படலாம்***

அரசியல் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் நிலையான, நிரந்தரமான அமைதி நிலை உருவாக வேண்டும் அதற்கு இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உறுதியான போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட வேண்டும். கடந்த இரண்டு மாதங்களாக நோர்வே சமாதானக் குழுவினரின் விடா முயற்சி காரணமாக போர் நிறுத்த உடன்பாடு முழுமை பெறும் தறுவாயில் இருக்கிறது. அனேகமாக இவ் உடன்பாடு இம் மாதம் 24ம் திகதிக்கு முன்னர் கைச்சாத்தாகலாம் என நம்புகிறோம். நிரந்தரமான அமைதி நிலை பேச்சுவார்த்தைக்கு உறுதியான அத்திவாரம் போன்றது. அதனால் தான் பேச்சுக்கு முன்னதாக அமைதி நிலை உருவாக்கப்படுவதற்கு நாம் முதன்மை கொடுக்கிறோம்.

(8ம் பக்கம் பார்க்க)

நடைபெறும் என்ற செய்தியை தமிழீழ விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் அலோசகர் பெறவுள்ளது என வெளியான செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லை அச்செய்தி தவறாகும். என்று தெரிவித்துள்ளார். (வ)

# யாழ் குடாவிற்கான பாதை திறப்பதில் அரசு பின்னடிப்பு

(கொழும்பு)

யாழ் குடாநாட்டுக்கான தரை வழிப்பாதையை திறப்பதில் அரசாங்கத்திற்கு சில தடைகள் இடையூறுகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப்புலிகள் குடாநாட்டுக்கான பாதை திறப்பதற்கு பரிபூரண சம்மதம் தெரிவித்திருப்பதுடன் அதனைத் துரிதப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை வன்னியில் பத்திரிகையாளர்களிடம் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களான சுதா மற்றும் புலித்தேவன் ஆகியோர் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

# மாணவி மீது வல்லுறவு இராணுவச் சிப்பாய் கைது

## வலம்புரியின் செய்திக்கு உடன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் பாடசாலை மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கருதப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து பிரஸ்தாப மாணவியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவத்தை வலம்புரிப் பத்திரிகை வெளியிட்டு பகிரங்கப்படுத்தியதை அடுத்து இராணுவப் பொலிஸார் விசாரணைகளை தீவீரப்படுத்தி சந்தேக நபரை கைது செய்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

குடாநாட்டில் இடம்பெற்ற இவ் வக்கிரமான சம்பவத்தை வலம்புரிப் பத்திரிகை வெளிப்படுத்திய போதும் சில அரச சார்புப் பத்திரிகைகள் அதனை மறைத்து இருட்டடிப்புச் செய்ததுடன், சம்பவம் வெளியே கசியாமல் தடுக்கும் நடவடிக்கையிலும் பகீரத பிரயத்தனம் எடுத்துள்ளன.

சம்பவத்தை வலம்புரி வெளியிட்டதை அடுத்து இலங்கை வானொலி உட்பட உள்நாட்டு. வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் அதனை முதன்மைப்படுத்தி செய்தியாக வெளியிட்டுள்ளன.

இதேவேளை யாழ். குடாநாட்டில் இடம்பெறுகின்ற சிறிய விடயங்களுக்கெல்லாம் பக்கம் பக்கமாக அறிக்கை வெளியிட்டும் - கண்டனம் தெரிவித்தும்

(8ம் பக்கம் பார்க்க)

# பாலியல் வல்லுறவுச் சம்பவம் பி.பி.ஸி இருட்டடிப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் இடம் பெற்ற பாடசாலை மாணவி மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவத்தை இலண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் பி.பி.ஸி செய்தி நிறுவனம் இருட்டடிப்புச் செய்துள்ளது.

யாழ். குடாநாட்டுச் செய்திகளுக்கு முதன்மை அளிக்கும் பி.பி.ஸி யின் தமிழோசை குடாநாட்டில் பரபரப்பான செய்தியை. வெளியே கசிய விடாமல் மூடி மறைத்து இருட்டடிப்புச் செய்தமை குடாநாட்டு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இச் சம்பவத்தை முதலில் வெளிப்படுத்திய வலம்புரியைத் தொடர்ந்து உள்நாட்டு வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும் இச் சம்பவத்திற்கு முதன்மை

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டது

யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக கைவிடப்பட்ட நிலையில் துவிச்சக்கர வண்டியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: கல்யாணி பல்பொருள் விற்பனை நிலையம் 402, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (4703)

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1971ல் பிறந்த லக்கினத்தில் செவ்வாய் குற்றமுள்ள கிரகபாவம் 44 கொண்ட ஆசிரியையாக பணிபுரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமக்களின் பதிவுகள் யாவும் இலவசம். தினசரி: 9.30-5.30மணி தொடர்பு: பொ. கேதீஸ் கடை அம்பாள் திருமண சேவை இல: 419 கோவில் வீதி, நல்லூர். (C-3551)


# ஜனநாயகப்பாங்கும் அமைதியும் மிக்க எதிர்காலம் இலங்கையில் அமையும்

## ஐரோ. யூனியன் சூழல் பொறுப்பு ஆணையாளர்

(கொழும்பு)

இலங்கை நிலைமையைச் சீர்திருத்த புதிய அரசு பாடுபடுவது எனக்குத்திருப்தியளிக்கிறது. உண்மையான ஜனநாயகப்பாங்கும், அமைதியும் மிக்க எதிர்காலம் அமையும் சாத்தியக் கூறுகள் இங்கு வெகுவாகவே தென்படுகின்றன.

ஏ.சி.எஸ் ஹமீட் நினைவுப் பேருரை அண்மையில் கொழும்பில் நடைபெற்றபோது, ஐரோப்பிய யூனியனின் சூழல் பொறுப்பு ஆணையாளர் மார்க்கொட் வோல்ஸ்ட்ரம இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

இலங்கையில் 18 வருடங்களுக்கும் மேலாக நீண்ட போரில் 80 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலியாகியும், இலட்சக்கணக்கானோர் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்தும் அகதிகளாகியும், சொத்து சுகங்களை இழந்தும் உள்ளனர்.

பின்னோக்கிப் பார்ப்பதால் பயனில்லை, இது ஒரு தேசிய அவலம் மட்டுமல்ல சர்வதேச அவலமுமாகும்.

மனித சுபாவத்தின் விளைவே. இது இதனை மனித சுபாவத்தால்தான் தீர்க்க முடியும். பெரும்பாலானோர் இதற்குத் தீர்வு வேண்டுகின்றனர். எனவே நிச்சயமாக இதனைத் தீர்க்க முடியும்.

உலகின் 40 வறிய நாடுகளில் 24 நாடுகள் ஆயுதப் போராட்டத்தில் சிக்கியுள்ளன. ஆபிரிக்க சனத்தொகையில் ஐந்தில் ஒருபங்கு மக்கள் நெருக்கடி வலயங்களில் வாழ்கின்றனர்.

ஐரோப்பிய யூனியன் இலங்கை நிலவரத்தில் விசேட கவனஞ் செலுத்துகிறது. இந்த வகையில் கடந்த இரு தேர்தல்களின் போதும், அதுதனது அவதானிகளை அனுப்பியது.

அரசியல்வாதிகளான நாம், மூகத்தின் சேவகர்களாவோம். நாம் சாதித்தவைகளே இறுதியில் எஞ்சுவதுண்டு, மக்கள் எம்மைத் தேர்ந்தெடுத்து விட்டார்களே என்பதற்காக நாம் எமது வாழ்க்கைப்போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை.

நான் எனது துவிச்சக்கர வண்டியிலேயே வேலைத்தலத்திற்குச் செல்வேன், இச்செயல் ஆரோக்கியமானது மட்டுமன்றி மனமகிழ்வூட்டக் கூடியதுமாகும். மக்களது வாழ்வை எளிமையாக்கக் கூடிய முறையில் உழைப்பது எமது முன்னுரிமையாகும்.

சமரசப் போக்கின்றி அரசியலில் எதையும் சாதிக்க முடியாது என்பதே எனது அனுபவம்.

ஜனாதிபதிக்கு என்ன வேண்டும், பிரதமருக்கு என்ன வேண்டும் அல்லது முழு அரசாங்கத்துக்கும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் என்ன வேண்டும் என்பதோ அல்ல பிரச்சினை,

வடக்கிலும், கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் உள்ள மக்களுக்கு என்ன வேண்டும் என்பதே பிரச்சினை,

இறுதித் தீர்வுக்கு ஆதரவளிக்கக் கூடியதாக முழு சனத்தொகையும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ)

## வாங்குமேடையில் நெல் அறுவடை

(இணுவில்)

உடுவில், சங்குவேலி, கந்தரோடைப் பகுதி விவசாயிகள் வாங்கு மேடை போட்டு நெல் அறுவடை செய்கின்றனர்.

வயல்களில்வெள்ளம்தேங்கி நிற்பதனாலேயே இவ்வாறு வாங்குமேடை போட்டு, வெட்டும் அருவிகளை அதில்அடுக்கி எடுத்து வந்து வேறிடங்களில் உலர்வைக்கின்றனர். (உ-49)

## பிறவுண் வீதி நேற்று முழுமையாகத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கலட்டிப் பகுதியை ஊடறுக்கும்பிறவுண் வீதி நேற்று முதல் முற்றுமுழுதானபாவனைக்குத்திறந்துவிடப்பட்டுள்ளது.

மேற்படி வீதியை, பாதசாரிகள், மற்றும் துவிச்சக்கர வண்டியில் செல்வோர் மாத்திரமே பயன்படுத்த படையினரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

## கல்லூரி அதிபர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி

(கொழும்பு)

கல்லூரி அதிபர்களின் முகாமைத்துவத்திறன்களை விருத்திசெய்யும் முகமாக மனிதவள அபிவிருத்தி அமைச்சு அவர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சிகளை அளிக்கவிருக்கிறது.

உலகவங்கியின் அனுசரணையுடன் 450 கல்லூரி அதிபர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கான விண்ணப்பங்களை கல்வி, மனிதவள, கலாசார அமைச்சு கோரியுள்ளது.

இதற்கென 2. 2 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒவ்வொன்றும் 25 பேர்கள்கொண்ட குழுக்களாக வகைப்படுத்தப்பட்டு மொத்தம் 18 குழுக்கள் ஐக்கிய இராச்சியம், இஸ்ரேல், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் எவற்றிற்கேனும் ஜூலை மாதத்திலிருந்து அனுப்பப்படுவர். இவர்களுக்கு மூன்று வாரங்கள் பயிற்சி வழங்கப்படும்.

இவ்வாறு பயிற்சிபெறுபவர்கள், நாட்டின் 10 ஆயிரம் கல்லூரி அதிபர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ் தமது சகாக்களுக்கு தாம் பெற்ற பயிற்சியை வழங்குவார்கள். இதுபோன்ற பயிற்சி வழங்கல் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 200 அதிபர்கள் அனுப்பப் பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அதிபர்களாக தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் சேவை செய்த 50 வயதிற்கு மேற்படாதவர்கள் இதற்கான விண்ணப்பங்களை மார்ச் மாதம் 4 ஆம் திகதிக்குமுன் சமர்ப்பிக்கலாம்,

அத்துடன், கல்வி நிர்வாக சேவையை சேர்ந்தவர்களாகவோ, அதிபர் சேவையிலிருந்தவர்களாகவோ மொத்தம் ஆசிரிய சேவையில் 10 ஆண்டுகள் சேவையாற்றியிருத்தலுடன், ஆங்கில அறிவுடன், கஷ்டப்பிரதேசத்தில் இரண்டு ஆண்டுகளாவது கடமையாற்றியவராக இருத்தல் வேண்டும். (உ)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

இன்று காலை 8.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருந்த, பாடசாலையை அடிப்படையாக கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்ட கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தால்எதிர்வரும் 21 ஆம்திகதி வியாழக்கிழமைநடைபெறும் என வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார்.

இக் கருத்தரங்கிற்கு வலிகாமம் வலய1எபி, 1சி, தரம் 1 பாடசாலை அதிபர்கள் மற்றும் ஒவ்வொரு பாடசாலையிலுமுள்ள எஸ்.பி.எ கண்காணிப்பு குழு செயலாளர் அல்லது சிரேஷ்ட ஆசிரியர், முதன்மை ஆசிரியர்கள் பிரதி உதவி கல்வி பணிப்பாளர்கள் ஆகியோரைஇக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## விமான சேவை

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் பாகிஸ்தானின் கரச்சி நகருக்கும் இலங்கைக்கும் இடையில் வாராந்த விமானசேவைஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.

வாராந்தம் நடைபெறும் இவ்விமான சேவையினால் இலங்கையிலிருந்து வெற்றிலை ஏற்றுமதி செய்யப்படுவதுடன் பாகிஸ்தான் உற்பத்திப்பொருள்களும் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இந்த விமான சேவையினால் இந்திய உப கண்டத்தைச் சேர்ந்த வேறுபல நாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்யவும் ஏற்றுமதி செய்யவும் உதவும் என தெரிவிக்கப்படுகிறது. (உ-8)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் இரண்டு அடுக்குமாடி வகுப்பறை தொகுதி-II அமைப்பதற்கான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டிட நிர்மாண வேலைகளுக்காக இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் அல்லது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்கள் பெறத் தகுதியுடையவராவார்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 28-02-2002 வரை ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பலகலைக்கழகக் காசாளர் கரும பீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1. மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 5,000/-
2. மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 500/-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 11.03.2002 காலை 10.00 மணிக்கு முன தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும. அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேளவிப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேளவிப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திட்டமிடற் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமினறி கேளவிதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

திருமதி நா. தங்கராஜா
பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

தபால்பெட்டிஇலக்கம். 5,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(C-3552)


# வட-கிழக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

ஹோட்டல் துறையினர், முதலீட்டாளர்களின் வேண்டுகோளகளை ஏற்று, வடக்கு-கிழக்கில் சுற்றுலாத்துறையை விருத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் பற்றி சுற்றுலாத்துறை அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

சமாதான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதும், அரசுக்கும் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஒப்பமிடப்படவிருப்பதும் வர்த்தகத்துறையினர் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன், சுற்றுலாத்துறையில் முதலீடுகளை செய்யக்கூடிய சூழல் உருவாகியுள்ளது என்று இது குறித்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக இதுவரை பயன்படுத்தப்படாத வடக்கு-கிழக்கின் வளங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் கடற்கரைப் பிரதேசம் மிகவும் அழகானதும், ஹோட்டல் வசதிகளைக் கொண்டதுமாகும். இதன் தனி வரலாறும், கலாசாரமும் சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்திற்கு மிகவும் ஏற்றதாகும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதேபோன்ற திட்டமொன்றை ஆசிய அபிவிருத்தி வங்கியும் முன்வைத்துள்ளது. இத்திட்டத்திற்கு உதவ சுற்றுலாத்துறை வர்த்தக சம்மேளத்தினை நாடியுள்ளதாக சுற்றுலாத்துறை சபைத் தலைவர் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் தனியார் துறையினரின் முதலீடுகளை செய்ய வருமாறு தாம் வர்த்தக சம்மேளனத் தலைவர் சந்திரா ஜயரத்னவை கேட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (உ)

# மதங்கடந்த இறைவனைத் தத்தம் மதவழிகளில் வழிபட வலியுறுத்திய ஸ்ரீஇராமகிருஷ்ணர்

உலக சமயங்களிலே ஆதியான சமயமாயும் எல்லாச்சமயங்களின் கருத்துக்களையும் உள்ளடக்கிய பெருஞ்சமயமாகவும் விளங்குவது இந்துசமயமாகும். இச்சமயத்திலேகாலத்துக்குக் காலம் ஆன்மீக ஞானிகள் தோன்றி இறைவனது திருவருளை வெளிப்படுத்தி மக்களை வாழ்வைச் செம்மைப் படுத்தியுள்ளார்கள். அந்த வகையில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய யுகபுருஷரே இராமகிருஷ்ணபரமஹம்சர். ஆவார்.

தட்சிணேஷ்வரத்துக் காளியை உபாசித்து கண்ணால் கண்டவர், வாயால் பேசியவர். தன்வாழ்க்கை நேரம்முழுவதையும் அம்பிகை வழிபாட்டில் ஒதுக்கி உண்மை வாழ்வு வாழ்ந்து பல அரிய சீடர்களை உருவாக்கி தான் பெற்ற ஞானத்தைப் பலவழிகளிலும் போதித்தார்.

மத மாற்றம்

19 ஆம்நூற்றாண்டில்இந்து சமயத்தவர் கிறிஸ்தவர்களாக மதம் மாறிய வேளையில் சமய அடிப்படை உண்மைகளை இந்துக்களுக்கு பல சிறு கதைகள் மூலம்தெளிவுபடுத்தியவர் இராமகிருஷ்ணபரமஹம்சர்,

இந்துமதத்திலிருந்துகல்விக்சாகவும், உத்தியோகத்திற்கும் பொருளுக்கும் மதம் மாறியவர்களைப் பார்த்து சமயங்கள்எல்லாம்ஒன்றையே போதிக்கின்றன. ஒருநீர் நிலைக்கு பல படித்துறைகள் இருக்கின்றன. எவ்வழி சென்றாலும் நீரைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறான

**இன்று ஜனன தினம்**

வையே பல்வேறு மதங்கள் எனத் தெளிவு படுத்தினார்.

இறைவன் ஒருவனே. அவனே பிரம்மம். நீர்இருக்கிறது இதனைச் சிலர் தண்ணீர் என்கின்றனர். சிலர் ஜலம் என்கின்றனர். சிலர் பாணி என்கின்றனர். சிலர் (Water) வோட்டர் என்கின்றனர். எந்தப் பெயரால் குறித்தாலும்தண்ணீர்ஒன்றே இதைப் போலவேபிரமத்தைச் சிவன்என்றும்விஷ்ணு என்றும் அல்லா என்றும் புத்தர் என்றும் பலர் பலவாறாக அழைக்கின்றனர்.எனவேமதமாற்றம் வேண்டியதில்லை. மதம்மாற வேண்டியதுமில்லை எனப் போதித்தார்.

இவரது போதனைகளை சின்னஞ் சிறு கதைகளாகவும் எல்லோரும் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடியவர்களாம்,பக்தி, ஞானம் எனும் மூன்றுவழி பாட்டையும் விளக்கிக் கூறினார்இதில்உயர்ந்ததுஞானம் கூறவில்லை பக்தி சிவனிடம் இருக்க வேண்டும். விவேகம் வைராக்கியம்கொண்டு ஞான நெறிக்கு செல்ல வேண்டும். தன்னைத்துமுவனாக்கி தியானம் செய்தால் இறைவனை உணரலாம் என்றார்.

விக்கிரக வழிபாடு

சடங்குகளைப்பற்றிக் கூறும் போது, சடங்கு நமக்குத் தேவைதான். ஆனால் அவை உமிபோன்றவை. நெல் முளைப்பதற்கு உமிதேவை. அதேபோல் உண்மையை அறியும் வரை சடங்குதேவை. இறைவனை உணர்வதற்கு விக்கிரக வழிபாடு தேவை. உணர்ந்தபின்தேவையில்லை. எனும்சைவசித்தாந்தக்கோட்பாட்டிற்கு புதுப்பரிணாமம் கொடுத்து விளங்க வைப்பதோடு சாகும் வரை உருவ வழிபாட்டோடு இருப்பவர்களையும் கண்டித்தார். சில மதங்கள் திருமணம் வேண்டாம், துறவு வாழ்க்கையே சிறந்தது. ஆடை அணிகலன்களே வேண்டாம் என்கின்றன. ஆனால் இந்துமதமோ இல்லறத்திலிருந்துகொண்டே இறைவனை அடையலாம் என்கின்றது. எறும்பு, மண்ணில்கொட்டிக்கிடக்குமினி, தானியம் முதலியவற்றை மண்ணிலிருந்து பிரித்து எடுக்கிறது. தாமரையிலைதண்ணீரில் பட்டும் படாமலும் இருக்கிறது. இதேபோல் மனிதர்களும் ஆசையை நீக்கி வாழ வேண்டும் என்றார்.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளைச் சாதனையாக்கஉலகெங்கும் இராமகிருஷ்ணமிஷன் ஆரம்பிக்கப் பட்டது. இந்தியா, மலேசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, இலங்கை என்றுபலநாடுகளில் இம்மிஷன் சேவையாற்றிவருவது தெரிந்ததே. இன்று அந்த மகானின் பிறந்த நாளில் அவரது சீரிய கருத்துக்களைச் சிந்தித்து அதன்படி வாழ்வதற்கு முன்வருவோம்.

சைவப் புலவர்
**செ. கந்தசத்தியதாசன்**

## கணனி மயப்படுத்தப்பட்ட தே. அடையாள அட்டைகள்

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் இருக்கும் தேசிய அடையாள அட்டைகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறைப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நூறுநாள் வேலைத் திட்டத்தையொட்டி நாடுதழுவிய ரீதியில் 40ஆயிரம் தேசிய அடையாள அட்டைகளை கணனி முறையில் வழங்க வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கணனி மயப்படுத்தப் பட்ட 4000தேசிய அடையாள அட்டைகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அடையாள அட்டைகளில் இடம்பெறும் மோசடி தவிர்க்கப்படும்.

(வ)

## ப. நோ. கூ. சங்கங்கள் காலை 7முதல் மாலை7வரை எரிபொருள் விற்க வேண்டும் யாழ். அரச அதிபர் உத்தரவு

(யாழ்ப்பாணம்))

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகவர்களாகச் செயற்படும் சகலபல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் தமது எரிபொருள் விற்பனை நிலையத்தை தினமும் காலை 7 மணி முதல் மாலை 7மணி வரை திறந்திருந்து விற்பனையில் ஈடுபட வேண்டுமென்று யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தனியார் முகவர்நிலையங்கள் சில தினமும் காலை 7 மணிமுதல் மாலை 7மணி வரை திறந்து வியாபாரம் செய்து வருவதைப் போல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் தங்கள் எரிபொருள் விற்பனை நிலையங்கள்களை காலை 7 மணி முதல் மாலை 7மணி வரை விற்பனைக்காக திறந்து வைத்திருக்கவேண்டும்.

இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்காவிட்டால் முகவர் நிலையங்களை நடத்துவதற்கான அனுமதியை ரத்துச்செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்

(வ)

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள

## வீதிகள் திறப்பது குறித்து இன்று ஆராயப்படும் !

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில்இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளகாவலரண்களில்உள்ள வீதிகளை மக்கள்பாவனைக்கு திறந்துவிடுவது தொடர்பான கூட்டம் ஒன்றுஇன்று யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரசஅதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்குடாநாட்டுத்தளபதி மேஜர் ஜெனரல்லால் விஜயசூரியா, மற்றும்பிரதேச செயலர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், கிராமசேவையாளர்கள்கலந்துகொள்ளவுள்ளனர்.

அரியாலை,யாழ்ப்பாணம் 512பிரிகட் அலுவலகம், கொட்டடி,சேந்தன் குளம், இராசபாதை ஆகியவீதிகளைத் திறப்பது தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப் படவுள்ளது. (வ)

## கூட்டங்கள் ஒத்திவைப்பு

(மந்திகை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறவிருந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மற்றும் விவசாய சங்கங்களின் கூட்டம் என்பன 20 ஆம் திகதி புதன்கிழமையும்,

இன்று நடைபெறவிருந்த காணி உறுதி கையளிப்பு கூட்டம் நாளையும் நடைபெறவுள்ளது என, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (உ-23)

**கராத்தே கழக ஆசிரியர் மாணவர்களுக்கு!**

**DRAGON MARTIAL ARTS** கழகத்தில் பயிற்சி பெற்ற **K.** ஜெகநேந்திரன் அவர்கள் மேற்படி கழக கட்டுப்பாடுகளை மீறிச்செயற்பட்டுள்ளார். ஆகையால் அவரது கறுப்புப்பட்டிச் சான்றிதழ்கள் யாவும் என்னால் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை கராத்தே நலன்விரும்பிகள் யாவருக்கும் அறியத்தருகின்றேன்.

**பு. ராஜன் மாஸ்ரர்**

(C-3553)

வவு- யாழ் நெடுஞ்சாலை பகுதியில்

## இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர்

(வவுனியா)

வவுனியா யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையில் மாங்குளம் வரையிலான பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் அடுத்த இரு வாரங்களுக்குள் மேற்கொள்ளவுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியுதவியை வடக்கு புனர்வாழ்வு அமைச்சு வழங்கவுளளது.

தற்காலிகவீடுகளை அமைப்பதற்கும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்குமென ஒவ்வொரு குடும்பதிற்கும் பத்தாயிரம் ரூபாவை அமைச்சு வழங்கும்.

இவர்கள் அனைவரும் மீளக் குடியமர்த்தும் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொள்ளவென வீடப்மைபுஅபிவிருத்தி அதிகாரசபை உதவி வழங்கவுள்ளதாகவவுனியா அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வரையான யாழ்ப்பாணம்கண்டிவீதிதிறக்கப்பட்டதையடுத்து ஓமந்தை, நொச்சிமுனை புளியங்குளம் கனகராயன் குளம் மாங்குளம்ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள மீளக்குடியமர விருப்பம் தெரிவித்ததையடுத்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

(ந-4)

## திருட்டு

(கல்வியங்காடு)

வீட்டின் ஜன்னலைப் பிரித்துக்கொண்டு உள்நுழைந்த திருடர்கள், அங்கிருந்து பெருந்தொகைப்பணம் மற்றும் பல்லாயிரக்கணக்கான பெறுமதிவாய்ந்த சொத்துக்களைக் களவாடிச்சென்றுள்ளனர்.

சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்து முடமாவடியில் வசிக்கும் சுந்தரலிங்கம் என்பவரது வீட்டிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுளது.

மேற்படி திருட்டுச் சம்பவத்தில் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவனும் ஈடுபட்டதை தான் நேரில் கண்டதாக வீட்டுப் பெண்மணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-245)

## இராசி பலன்

18- 2- 2002
(மாசி 6, திங்கள்)
சஷ்டி ந. இ 12. 26 வரை
அச்சுவினி பி. ப 3. 19வரை
ராகுகாலம் 8. 02- 9. 32
நல்ல நேரம் 12. 32- 2. 02
சஷ்டி விரதம், சித்தம்

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் சிறப்பு, போசன நன்மை, காரியம் நிறைவேறும்.

**இடபம்**
அமைதிக் குறைவு, சுப காரியச் செலவு, பிரயாணம், தொழில் கஷ்டம்.

**மிதுனம்**
பெருமையடைதல், பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி.

**கடகம்**
கீழ்ப்படிவு, தொழில் மேன்மை, முயற்சி ஜெயம், தூரதேசச் செய்தி.

**சிங்கம்**
உடல் உழைப்பு, வயிற்றுக் கோளாறு, வீண்பயம், பிரயாணம்.

**கன்னி**
வியாதி, பிரயாணபயம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தாமதம்.

**துலாம்**
வசீகரம்,காரியம்கைகூடும், உறவினர் வருகை,உல்லாசம்.

**விருச்சிகம்**
காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி,நண்பர்கள் சந்திப்பு தனவரவு.

**தனுசு**
அதிகாரம்,குடும்பமகிழ்ச்சி புத்திரரால் கவலை, முயற்சி தாமதம்,

**மகரம்**
மனச்சஞ்சலம், காரிய தாமதம், தாய்வழிஉறவு, விவாதம்

**கும்பம்**
அந்நியர் சந்திப்பு, தனவரவு, பிரயாண நன்மை, சுவாரஸ்யம்.

**மீனம்**
வீண்விவாதம், பொருள் விரயம், காரிய தாமதம், குடும்பக் கவலை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

**வளவன்.**

## வண்டிலில் மண்ணெண்ணெய் வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீண்டும் வண்டில்களில் மண்ணெண்ணெய் விற்பனை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுளளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன அரியாலை முகவர் ஒருவரின் வண்டில் வீடு வீடாக கொண்டுசென்று எண்ணெய் விற்பனையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

(வ)

## சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி அமைக்கத்திட்டம்

(கோப்பாய்)

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர்சபை சைவக் குரு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்சிக் கல்லூரி ஒன்றையும் நூலகக் கட்டிடம் ஒன்றையும் நிர்மாணிக்க திட்டமிட்டுளளது.

இதனை அமைக்க தேவையான நிதியுதவியை வழங்குமாறு பொது மக்களிடமும் பொது அமைப்புக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ள அர்ச்சகர் சபையினர் அதனை திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் உள்ள தமதுஅலுவலகத்தில் கொடுத்துதவுமாறு கேட்டுள்ளனர்.

(இ)

# நொந்தமனங்களையும் சாந்தமுறச் செய்யும்

# நந்தவனமாகச் சிறந்து விளங்கிடும் 'கிறீன் பாக்'

கண்ணுக்கு குளிர்ச்சியும் மனதிற்கு இதமும் தரும் இடமாக அமைந்திருந்தது அந்தப் பூங்கா, தென்றல் அங்கே தவழ்ந்துவரும், இளம் தென்னங்கீற்று சலசலக்கும், பசும் புற்றரையில் பனித்துளிகள் பளபளக்கும். அமைதியான சூழலில் வடிவமைக்கப்பட்டுள்ள அந்த பூங்காவினுள் ஒரு முறை நுழைந்தால்வெளியேற நினைக்கையில் மனம் சிறிது சஞ்சலப்படும் கைக்கடிகார முட்கள் அசைவதேதெரியாமலிருக்கும்.

பிளான்ட் பரடைஸ்

இவ்வாறான அற்புதமான காட்சிகளும் வேலைப்பாடுகளும் நிறைந்த இடமாக கிறீன் பாக் அன்ட் மிக்ஸ்சிங் ஸ்ரூடியோ விளங்குகிறது. கோயில் வீதியில் கைலாய பிள்ளையார்கோயில்சந்திக்கு அருகாமையில் மனதைக் கொள்ளை கொள்ளும் இடமாக புதுமெருகு பெற்று வரும் இப்பசுஞ் சோலையில் அனைத்துத் தரப்பினரையும் கவரும் வகையில் காட்சி நுட்பங்கள் பல புகுத்தப் பட்டு ளன.

கடந்த இருபது வருடகாலமாக பிளான்ட் பரடைஸ் என்ற பெயருடன் இயங்கி வந்த இந் நிறுவனம் 1983 இல் இருந்து குடாநாட்டுக்கு புதிய புதிய இனக்குறோட்டன் களையும் பூச்செடிகளையும் தருவிக்கும் செயற்பாட்டை மேற்கொண்டு வந்தது. அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்த ஏனைய பூங்காக்களுக்கு இவற்றை விநியோகிக்கும் மையமாக பிளான்ட்பரடைஸ் செயற்பட்டதை அதன் உரிமையாளர் இப்போதும் பெருமையோடு நினைவு கூர்ந்தார்.

முன்னூறு வகையான பூங்கன்றுகள்

தற்போதைய யாழ்ப்பாணச் சூழலில் பெரும் முதலீட்டை இறைத்து எந்தத் தொழிலையும் தொடங்க முன்வராத நிலையிலே இவ்வாறான பூங்கா உரிமையாளர்கள் துணிந்து எமது பிரதேச வளங்களையே பெருமளவு பயன் படுத்தி வெளிநாட்டுக் காட்சிகளுக்கு நிகராக தமது பூங்காக்களை மாற்றிவருவதுபாராட்டப்படவேண்டிய தொன்றே!

அந்த வகையில் கிறீன்பாக் பல அழகு அம்சங்கள் கொண்டதாக பன்னிரண்டு பரப்புக் காணியில் அமைவு பெற்றுள்ளது. அங்கே முன்னூறு வகையான பூங்கன்றுகள் இருக்கின்றன. ஆரம்ப காலத்தில் நாட்டப்பட்ட றோயல் பாம் தற்போது வளர்ந்து நிழல் தரும் விருட்சமாகியுள்ளது. மற்றும் கித்துள்பாம், ஒயில்பாம், என்பனவும் தொடக்க காலத்தன என்றும்; இவற்றிலிருந்து புதிய இனங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் தான் இறங்கியுள்ளதாகவும் உரிமையாளர் குறிப்பிட்டார்.

**எம்.எஸ். எஸ். கீர்த்தி**

அலங்காரக் குடைகள், மீன் தொட்டிகள், சுழல் இராட்டினம், அலங்கார இருக்கைகள் என்று பிரமாதமான முறையில் பூங்கா எங்கும் வர்ணஜாலமாகக் காட்சியளித்த வண்ணமுள்ளது. காலத்திற்குக் காலம் இங்கு கண்காட்சிகளும் நடைபெற்றிருக்கின்றன.

எழில் கொஞ்சும் மலை அருவி

அங்கே மலை அருவி தனியான சொர்க்க நிலைக்கு அழைத்துச் செல்லும் வண்ணம் சலசலத்தோடும் ஆறுடன் காணப்படுகின்றது. வீடியோ படப்பிடிப்புகளுக்கு வருபவர்களுக்கு அதிக எழில் கொஞ்சும் காட்சியாக மலை அருவிதிகழ்கிறது. திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்த நாள் விழாக்கள் மற்றும்பட்டமளிப்பு வைபவங்களை ஒட்டி அந்த நாள் நினைவுகளை தமது உறவினர்களோடு இணைந்து ஒளிப்பதிவு செய்பவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் சேவை ஆற்றி வரும் கிறீன் பாக், பூச்சாடிகள் வடிவமைக்கும் நிலையமாகவும் இயங்குவதைக் காண முடிந்தது. பல அளவுகளிலும் விதவித அலங்காரங்களில் அங்கு சாடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வெளிநாட்டு தாவர இனங்களான சைப்பிரஸ், றெசீனா போன்றனவும் பசுமையோடு வளர்கின்றன. இவற்றை பராமரிப்பதற்கு அதிக பணம்செலவிடப்படுவதாகவும் இனி வரும் காலங்களில் மேலும் பல நவீன உத்திகளைப் புகுத்திபூங்காவை நவீனமயப்படுத்த இருப்பதாகவும் கூறிய உரிமையாளர், மினி எக்ஸ் சோறாவில் தன்னிடம் உள்ள ஏழு வகையான இனங்களைக் காண்பித்தார். பல வர்ணங்களைக் கொண்டசெவ்வரத்தை இனங்களும் கண்ணைப் பறித்தன.

யாழ்.மண்ணின் பூங்காக்கள்

பூங்காவின் வட கரையாக அமைக்கப்பட்டிருக்கும் சிறிய மாடம் போன்ற கட்டடம் சிறப்பான சிற்பவேலைப்பாடுகள் நிறைந்த தூண்களோடு கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இரவு வேளைகளில் மின்குமிழ் அலங்காரங்கள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கின்றன. பல வர்ண நட்சத்திர மின் விளக்குகள் அணைந்து ஒளிரும் விதமாக ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதும் இரவுக் காட்சியை ரம்மியமாக்கிய வண்ணமுள்ளன.

குடாநாட்டில், நாட்டின் ஏனைய பாகங்களைப் போன்று பெரிய அளவிலான பூங்காக்கள் இல்லாதிருப்பது பெருங் குறைபாடேயாகும். நகரின் மத்தியில் மிளிர்ந்த சுப்பிரமணியம் பூங்கா இன்று காடு மண்டிக்கிடக்கிறது. முத்திரைச் சந்தி நல்லூரில்உள்ள கிட்டு பூங்காவும் தற்போது பாதிப்புக்குள்ளான நிலையில் சிறிதளவே வசதிகளைக் கொண்டுள்ளது. இவ்வாறான துர்ப்பாக்கியமான சூழலில் யாழ்ப்பாணச் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் மன அமைதியைக் கொடுக்கும் இடங்களாக கிறீன் பாக், முடமாவடியில் அமைந்துள்ள பூங்கனிச்சோலை, நெல்லியடி கெங்காபாம், இணுவில் ஸ்ரீகாந்பாம் போன்ற நிலையங்கள் அமைந்துள்ளமை நாம் செய்த பாக்கியமே.

யுத்த நெருக்கீடுகளுக்குள் சிக்கித் தவித்த மக்களுக்கு, மன அழுத்தங்க்ளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சாந்திஸ்தானங்களாகவும் விளங்கும் இவ்வாறான நந்தவனங்கள் யாழ்ப்பாணத்தில் மேலும் வளர்ச்சி பெற்றுநவீனதொழில்நுட்பமேலைத்தேய வசதிகளுடன் எதிர்காலத்தில் விளங்கின் எமது மண்ணும் எழில் கொஞ்சும்பிரதேசமாகமாறும் என்பதிலும் வீடியோ, படப்பிடிப்பு போன்ற துறைகளும் மேலும் வளர்ச்சி பெறும் என்பதிலும் எவ்வித ஐயமுமில்லை. ★

## ஆன்மீக சமய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு, ஆன்மீக சைவ இளைஞர் அமைப்பினர் இன்று, யாழ்ப்பாண குடாநாட்டில் பல பாடசாலைகளில் ஆன்மீக சமய நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். (செ

---

## முடிமக்கள்...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெற முயன்றார்கள். அவர்கள் கூறியிருக்கும் உவமைகளைக் கண்டால் இந்த உண்மை விளங்கும். தாங்கள் நேரிற் கண்டபோர்களையும், ஊர்களையும் உவமை கூறுகின்றபுதுமையை அங்குகாணலாம். வஞ்சிமாநகர் போல அழகிய தலைவி: வெண்ணிப்போர் ஆரவாரம் போலப் பழிச்சொல்அம்பலத்தில் ஆரவாரமாகிறது. என்றெல்லாம் பாடுகிற புதுமையினைச் சங்கப் புலவர்கள் நிலைநாட்டி விட்டதனை என் என்பது? இந்தப் புரட்சியின் பயனாக விளையும் புரட்சிகள், பல முடி மக்கள் வாழ்வில் காணும் சிறப்புகள் எக்கணம் குடி மக்கள் வாழ்விலும் கண்டாலன் றோகாப்பியம்:

இனிக்கும், காதலும், அழுகையும், வீரமும் காப்பியப் பெருஞ் சுவைகள், மாதவியும் கோவலனும் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்கின்ற காதல் வாழ்வே சிலப்பதிகாரப் புகார்க் காண்டம். கணவனை இழந்த கண்ணகியே அவலச் சுவையின் ஆழத்தைக் காட்டுகின்றாள். அந்தக்கதைதான் மதுரைக் காண்டம், கண்ணகிக்காக எடுத்த கல்லினை வடவரசர் தலைமீது ஏற்றி வந்த செங்குட்டுவனது வீரத்தைப்பாடுவதே வஞ்சிக்காண்டம் அரசனிடம் வீரம் கண்டால். குடிமக்கள் காப்பியம் எழுதற்கு இடமில்லை, கோவலனிடம் வீரம் காண் கிறார் இளங்கோவடிகள். இன்று உலகம் போற்றும்வீரம்காந்தியடிகள் காட்டிய வீரம். இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காண்கிறார் இளங்கோவடிகள். யானையைக் கொல்லாமலேயானைக் காலிலிருந்து முதியவனைக் காப்பாற்றுகின்றான் கோவலன், அவன் கருணை மறவனாகக் காட்சியளிக்கின்றான். கண்ணகி வீட்டை விட்டு வெளிவராத பெண்- வெளிநாட்டில் பாண்டியனை வெல்கிறாள், கடவுளாக மாறுகிறாள், ஈதொரு புதுமை, பரத்தையரைப்பழிப்பதே அன்றும் இன்றும் வழக்கம், பரத்தையர் குடிப்பெண்ணான மாதவி கற்பரசியாக ஒங்குகிறாள், துறவறத்தின் முடிமணியாகச் சிறக்கின்றாள், அவள் மகள் உலக குருவாக விளங்குவதனை மணிமேகலை கூறு கின்றது. குடிமக்கள் சிறப்பினை இதற்கு மேலும் எவ்வாறு கூறுவது? திருவள்ளுவர் தமதுபொருட்பாலில் குடிகளதுசிறப்பினைக் கடைசிப்பதின்மூன்று அதிகாரங்களில் கூறுவதன் நுட்பம் இப்போது விளங்குகிறதன்றோ, குடிமக்கள்சிறப்பினை இடைக்காலத்தில் தமிழ்நாடு மறந்ததும் உண்டு, அப்போது திருவள்ளுவர் கூறிய குடியியலின் நுட்பத்தினை உணரமாட்டாது அந்தஅதிகாரங்களைஒழிபியல் என்று ஒதுக்கிவைத்ததுஎன்ன புதுமையோ? நாட்டின் உயிர் நிலையாய்ப் பொருட்பாலின் முடிமணியாக விளங்குவது ஒழிபியலாக ஒதுக்கப்படுவது காலத்தின் கோளாறன்றோ? இன்று குடிமக்கள் காப்பியத்தின் பெருமையை உணர்ந்து வருகிறோம். குடியரசிலன்றோ வாழ்கின்றோம்! பழைய நூல்களைப் புதிய கண்கொண்டு உண்மையை உணர இனி வழியேற்படும். ●

நன்றி, இன்பத்தமிழ்

---

### கல்வியமைச்சு அலுவலகங்களில்

# பணிபுரியும் அதிபர் ஆசிரியர்களை பாடசாலை செல்லுமாறு பணிப்பு

(கொழும்பு)

கல்வி அமைச்சுக்கள், பிராந்திய கல்வியமைச்சு அலுவலகங்களில் பணிபுரியும் அதிபர்களையும் ஆசிரியர்களையும் மீண்டும் பாடசாலைகளுக்கு சென்று கடமைபுரியுமாறு கல்வி கலாசார மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவித்துள்ளார்.

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள கல்வி அலுவலகங்களில் 400 க்கும் அதிகமான அதிபர்கள் ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர்என, தேசிய கல்விச் சேவை சங்கத்தால் முறைப்பாடு செய்யப்பட்டதற்கு அமையவே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின்படி அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளில் மட்டுமே கடமைபுரிய வேண்டும்.

அவர்களை கல்வி அலுவலகங்களிலோ, பிராந்திய பணிமனைகளிலோ கடமையாற்ற அனுமதிப்பது இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(உ-8)

### கல்வித் துறையில்

# குறைகேள் அதிகாரியை நியமிக்கத் திட்டம்

(கொழும்பு)

கல்வித்துறையில் குறைகேள் அதிகாரி ஒருவரை நியமிக்கும் திட்டம் ஒன்றை விரைவில் செயற்படுத்தப் போவதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்,

கல்வித்துறையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் அதற்குத் தீர்வுகாணும் வகையிலேயே புதிதாக குறைகேள் அதிகாரி ஒருவரை நியமிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாற்றுத்தேசியப்பாடசாலைத் திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும்,

தேசியப்பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் ஏற்படும் நெருக்கடி நிலைமைகளைத் தவிர்ப்பதற்காகவே இப்புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ)

### நோயாளர்

# கப்பல் சேவை மேலும் 2 தடவை நடைபெறும்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிற்கான செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் கப்பல் சேவை இந்த மாதம்மேலும் இரண்டு தடவைகள் நடைபெறவுள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதற்கேற்ப அடுத்த நோயாளர் கப்பல் சேவை இம் மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இக்கப்பல் மூலமே யாழ். குடாநாட்டிற்கான மருந்துப் பொருட்கள் மற்றும் தபால் பொதிகள் என்பனவும் எடுத்துவரப்படுகின்றன. (செ)

## திருட்டு அதிகரிப்பு

(இணுவில்)

உடுவில் டச்சுவீதிப்பகுதியில் அண்மைக்காலங்களாக, என்றுமில்லாதவாறு திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

இதனையடுத்து இருள் கவியும் முன்னர் இப்பகுதி மக்கள் வீடுகளில் முடங்குகின்றனர்.

(உ-49)

### விபரீதங்களைத்

# தவிர்க்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில், சட்டவிரோதமாக தயாரித்து விற்பனை செய்யப்படும் சிகரெட்டுக்களினால் ஏற்படும் விபரீதங்கள், இழப்புக்களைத் தவிர்க்கும் வகையில் அதன் விலைகளில் மாற்றங்களை ஏற்படுத்த நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமையவிலைகுறைந்த சிகரெட்டுக்களின் விலை, ஒரு ரூபா 50 சதத்தினால் குறைக்கப்படுவதுடன், விலை கூடிய சிகரெட்டுகளின் கலால்வரி 50 சதத்தினால் அதிகரிப்புச் செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# டென்மார்க் வர்த்தகர் குழு இலங்கை வருகை

(கொழும்பு)

கைத்தொழில் உற்பத்திப் பொருள்கள், சுகாதார நிலைமைகள் போன்றவற்றை பார்வையிடுவதற்கு டென்மார்க்கிலிருந்து வர்த்தகர்கள் தூதுக்குழுவொன்று எதிர் வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

ஐரோப்பிய வர்த்தக தகவல் நிலையத்தாலும் இலங்கையின் ஐரோப்பிய வர்த்தக சம்மேளனத்தினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட இக்குழுவினரின் இலங்கை விஜயத்தின் போது,

பால் உற்பத்தி, உணவு வகைகளை பதனிடும் இயந்திரங்கள் போன்ற கைத்தொழில்கள், சூழல் மாசடைவதனை அவதானித்து அவற்றிலுள்ள முறையற்ற செயல்களை மறுசீரமைக்கவுள்ளனர். (உ-8)

## இன்று ஒரு தகவல்

# பிரம்மஞானம்

அந்தக் காலத்தில் வசிஷ்டர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவர் மற்றவர்கள் மாதிரிச் சாதாரண முனிவரல்ல, பிரம்ம ரிஷி. ஒருவருக்குப் பிரம்ம ஞானம் வந்துவிட்டதென்றால் அவரைப் பிரம்ம ரிஷி என்று சொல்லுவார்கள். அந்த ஞானம் அவ்வளவு சுலபமாக எல்லோருக்கும் வந்துவிடுவதில்லை. அதை அடைவதற்கு விசுவாமித்திரரே என்ன பாடுபட்டிருக்கிறார் தெரியுமா? ''நானும் பிரம்ம ஞானத்தைப் பெறவேண்டும். என்னையும் பிரம்ம ரிஷியென்று எல்லோரும் மதிக்க வேண்டும்'' இப்படி ஒரு ஆசை விசுவாமித்திரருக்கு.

சரி... அதற்கு என்ன வழியென்று யோசித்தார். நேராகக் காட்டுக்குப்போனார். கடுமையாக தவம் செய்ய ஆரம்பித்தார். கொஞ்ச நாட்கள் ஆனது.

திடீரென்று ஒரு நாள்... அவர் தான் பிரம்ம ஞானம் அடைந்துவிட்டதாக நினைத்தார். உடனே அவர் வசிட்டரிடம் போய் அவரை வணங்க வேண்டுமென்று முடிவு செய்தார்! அவரிடம் போனால் தனக்கு பிரம்ம ஞானம் வந்துவிட்டதா இல்லையா என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதற்கு ஒரு வழி இருக்கிறது. அந்தக் காலத்தில் ஒருவரையொருவர் வணங்குவதில் சில சம்பிரதாயங்கள் இருந்தன.

ஒரு பிரம்ம ரிஷியை இன்னொருவர் வணங்குகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். வணங்க வந்தவர் தமக்கு சமமாக பிரம்ம ஞானம் அடைந்தவராக இருந்தால் பிரம்ம ரிஷி பதிலுக்கு அவரை வணங்கலாம். அப்படி இல்லையென்றால்... பிரம்ம ரிஷி தமது கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் பண்ண வேண்டும். அவ்வளவு தான். இதை மனதில் வைத்துக் கொண்டுதான் விசுவாமித்திரர் வசிட்டர் இருக்கிற இடத்தைத் தேடிக்கொண்டு போனார். அவரைப் போய் வணங்குவோம். அவர் பதிலுக்கு நம்மைவணங்கினால்.. நமக்கு பிரம்மஞானம் வந்துவிட்டதென்பது உறுதியாகிவிடும் என்று நினைத்தார். வசிட்டர் ஆச்சிரமத்துக்கு வந்துசேர்ந்தார். விசுவாமித்திரர் அவரை வணங்கினார். ஆனால் அவர் பதிலுக்கு இவரை வணங்கவில்லை. கையைத் தூக்கி ஆசீர்வாதம் செய்தார். விசுவாமித்திரருக்கு கோபம் வந்துவிட்டது. இவ்வளவு கடுமையாகத் தவம் செய்தோம். இவர் நம்மை பிரம்ம ரிஷியாக ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறாரே! என்கிற கோபம். மறுபடியும் திரும்பி வந்து தவம் செய்ய ஆரம்பித்தார். ஒருநாள் திடீரென்று அவருடைய இஷ்டதெய்வம் முன்னால் வந்து காட்சி கொடுத்தது.

'விசுவாமித்திரா! நீ போய் வசிட்டரை வணங்கு! அவர் பதிலுக்கு உன்னை வணங்கவில்லையென்றால் உடனே அவர் தலை சுக்குநூறாக வெடித்து விட வேண்டும் என்று சாபம் கொடுத்துவிடு!' என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டது. உடனே விசுவாமித்திரர் புறப்பட்டுப் போனார். மறுபடியும் வசிட்டரை வணங்கினார். அவர் மறுபடியும் பழைய மாதிரியே கையைத்தூக்கித்தான் ஆசீர்வாதம் பண்ணினார். விசுவாமித்திரருக்குக் கடுமையான கோபம். ரஜோகுணத்தோடு வேகம் அதிகமாகி விட்டது. 'இவ்வளவு தவம் செய்தும் என்னை அங்கீகரிக்காத உங்களையும், உங்களைச் சார்ந்தவர்களையும் நான் என்ன செய்கிறேன் பார்!' என்று பொங்கி எழுந்தார்.

ஆனால் அந்த நேரத்தில் அவரிடம் திடீர் என்று ஒரு மாற்றம். இவ்வளவு காலமும் அவர் செய்த தவமெல்லாம் சேர்ந்து நல்ல எண்ணங்கள் உண்டானதாம். அவர் யோசிக்கிறார். சரி... இங்கு நம்மை பிரம்ம ஞானியாக ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் என்ன? அதற்காக நான் ஏன் இவ்வளவு கோபப்பட வேண்டும். கோபத்தால் புத்தி தடுமாறி சாபம் கொடுக்க இருந்தேனே! கோபம்-பொறாமை மற்றவர்களுக்குக் கெடுதல் செய்வது .. இம்மாதிரி நினைப்பு சராசரி மனிதனுக்குவரலாம். இவ்வளவு காலம் தவம் செய்த எனக்குவரலாமா? என்மனதில் இன்னமும் இந்தக் கெட்ட எண்ணங்கள் இருக்கின்றனவே, அப்படி இருக்கும் போது பிரம்மஞானம் எனக்கு வந்துவிட்டதென்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்று நினைத்தார்.

''உண்மையான தவம் என்றால் என்ன? மற்றவர்களுக்கு கெடுதல் செய்கிற எண்ணமே வரக்கூடாது அல்லவா? நான் எவ்வளவு மோசமாக ஆகிவிட்டேன். என்னிடம் இருக்கிற அதே ஆத்மாதானேஎல்லாஉயிர்களிடமும் இருக்கின்றது'' என்று நினைத்தார். வெட்கத்தோடு தலைகுனிந்தபடி திரும்பி நடக்க ஆரம்பித்தார் விசுவாமித்திரர்.

''கொஞ்சம் நில்லுங்கள் முனிவரே! என்று ஒரு குரல். இவர் திரும்பிப்பார்த்தார், பின்னால் வசிட்டர் வந்து கொண்டிருந்தார். ''ஏன்? என்பது மாதிரி இவர் அவரைப்பார்த்தார்'' 'கொஞ்சம் நில்லுங்கள். நான் உங்களை வணங்க வேண்டாமா? உங்களை வணங்கி நான் உங்கள் வணக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். உங்களுக்கு பிரம்ம ஞானம் வந்துவிட்டது என்றார்'. பின்னர் வசிட்டர் சொன்னார். ''பிரம்மரிஷியே, முதலில் உம்மிடமிருந்த ரஜோகுணம் நீங்கி சுத்த சத்துவ குணம் வந்துவிட்டது' அந்த ஒளி இப்போது உங்கள் முகத்தில் தெரிகிறது. நீங்கள் உண்மையான பிரம்மஞானிதான் என்றார்.

வசிட்டர் தன் வாயாலேயே 'பிரம்மரிஷி' என்று சொல்லிவிட்டார். இனி என்ன வேண்டும்? அந்தக்காலத்தில் வசிட்டர் வாயால் பிரம்மரிஷி என்று பட்டம் வாங்கியது போல் இந்தக் காலத்திலும் கடுமையான முயற்சிகள் செய்து நானும் வாங்கிவிட்டேன் என்றார் ஒரு குடும்பஸ்தர், ''வசிட்டர் யார்?'' என்று கேட்டேன். எங்கள் வீட்டுக்கார அம்மாதான் என்றார். அப்படி அவர்கள் வாயால் என்னதான் சொல்லிவிட்டார்கள் என்றேன், வெகு நாட்களுக்குப் பின்னர் இன்றைக்குத்தான் சொன்னார்கள் என்றார், ''என்ன சொன்னார்கள்? அதைமுதலில் சொல்லுங்கள்'' என்றேன், ''சாம்பாரில் நான்போட்ட உப்பு சரியாக இருக்கிறதென்று சொல்லிவிட்டார்கள்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்கள்
# தபாற்கந்தோரிலும் பெறலாம்

(கொழும்பு)

பிரதேச செயலாளர்களின் அலுவலகங்களில் மட்டுமன்றி தபாற்கந்தோர்களிலும் கடவுச் சீட்டிற்கான விண்ணப்பப் பத்திரங்களை மக்கள் பெறுவதற்கு வழிசெய்யப்படும்.

இதற்கென ஒரு சிறு தொகை அறவிடப்படும் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

100 நாள் துரித வேலைத் திட்டம்பற்றி விபரித்த அமைச்சர் விரைவில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்படும் போது அதன்மூலமாக மக்கள் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ள முடியும்எனவும் தெரிவித்தார்.

கடவுச் சீட்டுக்களை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஒருபகுதியாக அவற்றிற்கான கட்டணங்களை கடன்அட்டைகளைப் பயன்படுத்தி வழங்கும் வசதிகளும் வழங்கப்படவுள்ளன.

(உ)

## வீடுகளுக்கு தட்டுப்பாடு

(துன்னாலை)

மீளக்குடியமரச் செல்லும் தென்மராட்சி மக்கள் தமது வீடுகள் அழிவடைந்தும் சேதமடைந்தும் உள்ள நிலையில் குடியிருப்பதற்குப் பெரிதும் சிரமமுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டு மேற்படி பகுதியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் ஷெல் வீச்சு மற்றும் விமானக்குண்டு வீச்சினால் பெருமளவு வீடுகள் மண்ணோடு மண்ணாகியும், சேதமடைந்தும் உள்ளமை தெரிந்ததே.

(உ-41)

## மின்மானி பொருத்துதல் தாமதம்

(உரும்பிராய்)

உரும்பிராய்ப்பகுதி மின் பாவனையாளர்கள், மின்மானி பொருத்துவதற்கு வேண்டிய பணத்தைச் செலுத்தியும் இதுவரை மின்மானி பொருத்தப்படவில்லை.

இதனால், தாம் மேலதிகமாக கட்டணம் செலுத்தும் நிலை தொடர்வதாகவும் மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

(உ-215)

## நேரடி அஞ்சல்

(அரியாலை)

எதிர்வரும் மார்ச்மாதம் 12 ஆம் திகதி, திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நிகழவிருக்கும் மகாசிவராத்திரி தின நிகழ்வுகள் இலங்கை வானொலி, ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளன.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற இந்துகலாசார அமைச்சின் யாழ். அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் இத் தகவலை வெளியிட்டார்.

(உ-225)

## பெண்ணிலைவாதம் பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞான பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கருத்தரங்குத் தொடரில் 9 வது நிகழ்வு இன்று பி.ப.3 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் இரா. சிவசந்திரன் தலைமையில்இடம்பெறவுள்ளமேற்படி கருத்தரங்கில் மட்டக்களப்பு சூரியா பெண்கள்அபிவிருத்திநிலையத்தைச் சேர்ந்த வாசுகி ஜெய்சங்கர் 'பெண் நிலைவாதச் செயற்பாடுகள் பற்றிய அனுபவப் பகிர்வு' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

மேற்படி கருத்தரங்கிற்கு ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறமுடியுமென செயலாளர் திருமதி. நா. செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

(உ)

## ஊடகப் பேச்சாளராக தயானந்தகருணாதிலக

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் புதிய ஊடகப் பேச்சாளராக தயானந்த கருணாதிலகவை இவ்வார இறுதியில் நியமிக்கவுள்ளது.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு சிங்கப்பூர் சென்ற பிரதமர் நாடுதிரும்பியதும் இந்நியமனம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளராகஇருந்த கருணாசேன கொடித்துவக்கின் இடத்துக்கே இவர் நியமனம் செய்யப்படவுள்ளார்.

(உ-8)

## மகாபொல கொடுப்பனவு

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன 1997- 1998, 1998-1999 ஆம்கல்வி ஆண்டு மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்படுகின்றன.

(உ-109)

## இலவச கண் பரிசோதனை முகாம் வல்வையில்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் உடுப்பிட்டி வர்த்தகர் சங்கத்துடன் இணைந்து நடத்தும் 10 வது மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் இம்மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டி வர்த்தகர் சங்க எல்லைக்குட்பட்டவறிய மக்களில் 40 வயதுக்குமேற்பட்ட 150 பேருக்கு மட்டும் கண் பரிசோதனை இடம்பெறவுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

(உ)

## சைவத்தை வளர்க்க பல்வேறு திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சைவத்தைத் தழைத்தோங்கச் செய்யும்வகையில் சைவநூலகம், சைவ ஆராய்ச்சிக் கூடம், சைவசமய கேட்போர்கூடம் என்பன நிறுவப்படவுள்ளன.

மேற்படி பணிகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பையும், யாழ். பல்கலைக் கழக அறிஞர்களின் ஆலோசனைகளையும் இந்து கலாசார அமைச்சு கோரியுள்ளது.

(உ-109)

## புகுமுக மாணவர்களுக்கு விரிவுரைகள் ஆரம்பம்

(வண்ணார்பண்ணை)

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவன, 2002 ஆம் ஆண்டுக்கான கற்கை நெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான பகல்நேர முதலாம் அரையாண்டு விரிவுரைகள் இன்றும், மாலை நேர முதலாம் அரையாண்டு விரிவுரைகள் எதிர்வரும் சனிக்கிழமை 23 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன.

ஏனைய வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு விரிவுரைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-109)

## ஏழு அமைச்சர்களுக்கு நாளை பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

புதிதாக அமைச்சரவை அந்தஸ்து பெற்றுள்ள ஏழு அமைச்சர்கள் நாளை செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

இவர்கள் கடந்தவாரம் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவிருந்த போதும் ஜனாதிபதியின் சுகவீனம் காரணமாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்றிருந்தமையினாலும் பதவிப்பிரமாணம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(செ)

## சிந்தனைக்கு விருந்து

### நன்றே அமைக

சென்றகா லத்தின் திறங்களெலாம் மீண்டுடுக
நன்றே அமைக நலமெண்ணிச் – சென்றிட்ட
மாதங்கள் நான்காய்வெண் பாவிலேநானுரைத்த(து)
ஏதும் பிழைபொறுப் பீர்.

'பழையவன்'

# உலக தரிசனம்

## போதைப்பொருள் ஏற்றிச்சென்ற கப்பல் அராபிக்கடலில் மூழ்கடிப்பு!

(ஒட்டாவா)

அராபியக்கடலில்போதைப் பொருள் ஏற்றி சென்ற கப்பலை கனடா யுத்தக்கப்பல் இடைமறித்து மூழ்கடித்துள்ளது.

கப்பல் மூழ்கடிக்கப்பட்ட போதிலும்போதைப்பொருள் கடத்தி வந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

தலிபான் அல்லது அல் கெய்டாக்களுக்கு இக் கடத்தலுடன் தொடர்பிருக்கின்றதா என்பதைக் கண்டறிய புலனாய்வு அதிகாரிகள் முயற்சித்து வருவதாக கனடா அறிவித்துள்ளது.

25 மில்லியன் டொலர்கள் பெறுமதியுள்ள இரு தொன் எடையுள்ள போதைப் பொருட்கள் இக்கப்பலில் இருந்தது என்றும்தெரியவந்துள்ளது. (உ-3)

## சந்தேகப் பேர் வழிகள் பற்றி ஆப்கானிடமிருந்து சமிக்ஞை கிடைக்கவில்லை

(றியாட்)

ஆப்கானிஸ்தான் போக்குவரத்து மற்றும் உல்லாசத் துறை அமைச்சரின் படுகொலை தொடர்பாக சந்தேகிக்கப்படும் மூன்று அதிகாரிகளையும் திருப்பி அனுப்புவதற்கு ஆப்கானிஸ்தான் அரசிடமிருந்து உத்தியோகபூர்வ வேண்டுகோள் கிடைக்கவில்லையென்று சவூதி அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் இடம்பெறுபவர்கள் சவூதி அரேபியாவிற்குள் பிரவேசித்துள்ளனரா என்பது பற்றி இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையென சவூதி அரேபிய உள்விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ)

## கம்யூனிஸ்ட் நாடுகளுடன் உறவைப் பலப்படுத்த வடகொரியா நாட்டம்

(சியோல்)

ரஷ்யாவுக்கும் வடகொரியாவுக்கும் இடையே வர்த்தகத் தொடர்புகளை அதிகரித்து பொருளாதார உறவை மேம்படுத்துவது குறித்து இரண்டு நாடுகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

அமெரிக்காவுடனும், தென் கொரியாவுடனும் கடந்த வருடம் முதல் உறவுகள மோசமாக விரிசலடைந்து வரும் நிலையில் ரஷ்யாவுடன் அதிகநெருக்கம் கொள்வதற்கு வடகொரியா நாட்டம்காட்டி வருகிறது.

ரஷ்யாவுடன் மட்டுமல்லாது கம்யூனிஸ்ட் ஆட்சி நிலவும் சீனாவுடனும் தனது உறவைப் பலப்படுத்திக் கொள்வதில் வடகொரியா ஆர்வம் காட்டி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் ஆரம்பகட்டமாகவே அண்மையில் வடகொரியாவுக்கான சீனத் தூதுவரை ஜனாதிபதி கிம்ஜொங் இல் சந்தித்ததாகக் கூறப்படுகின்றது. (உ-3)

## பலஸ்தீனத்தில் நால்வர் பலி

(ஜெருசலேம்)

பலஸ்தீன மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் மூன்று பலஸ்தீனியர்களும் ஒரு இஸ்ரேலியரும் பலியாகியுள்ளனர். (செ)

## விளையாட்டுச் செய்திகள்

### சகேப்கான் மீண்டும் போட்டிகளில் பங்குபற்றவுள்ளார்

(லண்டன்)

இந்தியகிரிக்கெட் அணியின் இடது கைப்பந்து வீச்சாளர் சகேப்கான் மீண்டும் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்தவருடம் இங்கிலாந்து உடனான போட்டித் தொடரை அடுத்து இவர் இந்திய அணியில் இடம்பெறாதிருந்தார்.

தற்பொழுது சிம்பாவேயுடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியில் இவர் விளையாடவுள்ளார். (செ)

### சுழல்பந்து வீச்சாளர் ஓய்வுபெறுகிறார்

(இலண்டன்)

சிம்பாவேயின் சுழல் பந்து வீச்சாளரான போல்ஸ்ரோங் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக சிம்பாவே கிரிக்கெட் யூனியன் அறிவித்துள்ளது.

காயங்கள் காரணமாக இவர் கடந்தசில வருடங்களாக விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனாலேயே இவர் ஓய்வு பெறுவதாகவும் அவ் யூனியன் அறிவித்துளது. (செ)

### கரப்பந்தாட்ட போட்டி

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்றுவரும் கரப்பந்தாட்டப் போட்டியில் நாளை பி.ப. 2 மணிக்கு.

15 வயதுப் பிரிவில் யா-சோமஸ்கந்தா கல்லூரி எதிர் யா-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி,

17 வயதுப் பிரிவில் யா-சோமஸ்கந்தா கல்லூரி எதிர் யா-கோபபாய் கிறிஸ்தவக் கல்லூரி,

19 வயதுப் பிரிவில் யா-சோமஸ்கந்தா கல்லூரி எதிர் யா-அத்தியார் இந்துக் கல்லூரி, யா-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர்யா-அச்சுவேலி மத்திய கல்லூரி என்பன யா-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-79)

### மோனிக்காரெலஸை அலிஸாகொலிட் தோற்கடித்தார்

(இலண்டன)

கட்டாரில் நடைபெறும் பகிரங்கரெனிஸ் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த மோனிக்கா ரெலஸ் அவுஸ்திரேலியாவைச்சேர்ந்தஅலிஸா கொலிட்டை 6:3, 6: 7,6:4 என்ற செற்கணக்கில் தோற்கடித்துள்ளார். (செ)

## அமெரிக்காவும் பிரிட்டனும் அணுப்பரிசோதனை

(வாஷிங்டன்)

நெவடா பாலைவனத்தில் 960 அடி ஆழத்தில் அணுப் பரிசோதனையை அமெரிக்காவும் பிரிட்டனும்மேற் கொண்டுள்ளன.

அணு வெடிப்பை ஏற்படுத்தாமல் முதன்முதலாக அமெரிக்காவும் பிரிட்டனும்இணைந்து இப் பிரிசோதனையை மேற்கொண்டுள்ளன. (உ-3)

## ஆபத்தான நிலையில் 13 உண்ணாவிரதிகள்

(சென்னை)

கோயம்புத்தூர் சிறையில் கால வரையறையற்ற உண்ணா விரதத்தில் ஈடுபட்டிருந்த 13 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 1998 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் இடம் பெற்றதொடர்குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில்167பேர் கைது செய்யப்பட்டு அவர்களில் 90 பேர் கோயம்புத்தூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்களில் 30 பேர், தங்களுக்கும் மேற்படி சம்பவங்களுக்கும் தொடர்பில்லை எனக்கூறி தம் மீதான வழக்கு விசாரணையை விரைந்து முடிக்க வேண்டும் இல்லையேல் பிணையில் விடுவிக்க வேண்டும் எனக் கோரியும் கடந்த திங்கள்முதல்உண்ணாவிரதமிருந்து வருவது தெரிந்ததே.

இந்த 30 பேரில் 13 பேரே மிகவும் ஆபத்தான நிலையில் கோயம்புத்தூர் மத்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றனர். (உ)

## ஐ.நா. நீதிமன்றம் சட்டரீதியானதல்ல மிலோசெவிக் குற்றச்சாட்டு

(திஹேக்)

இனப்படுகொலைகளில் ஈடுபட்டதாக தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று யூகோஸ்லாவிய முன்னாள் ஜனாதிபதி மிலோசெவிக் கூறியுள்ளார்.

தான் குற்றவாளி என்பதை ஐ.நா. நீதிமன்றம் முடிவெடுத்தன் பின்னர், பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும், ஐ நா. நீதிமன்றம் சட்ட ரீதியாக அமைக்கப்படவில்லை என்றும், அவர் குற்றம் சாட்டினார்.

சேர்பிய அதிகாரிகளால ஹேகிடம் கடந்த ஜூன் மாதம் தான் ஒப்படைக்கப்பட்டது. சேர்பிய மற்றும் யூகோஸ்லாவிய சட்டங்களுக்கு முரணான செயல் எனவும், கூறியுள்ளார்.

ஐ.நா.நீதிமன்றின் நீதியரசரான ரிச்சட் மே, மிலோசெவி இன் வாதத்தை நிராகரித்துள்ளார். (உ-3)

## சேலத்தில் இருவருக்கு 'பொம்பே' இரத்தவகை இருப்பது கண்டுபிடிப்பு

(புதுடில்லி)

உலகத்திலேயே மிகஅரிதாகக் காணப்படும் பொம்பே இரத்தவகை, சேலத்தில் இருவருக்கு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மனித இரத்தத்தில் **A, B, AB, O** என நான்கு வகைகளைத் தவிர வேறு வகை இல்லை என மருத்துவத்துறையினர் நம்பியிருந்தவேளை,

1952 இல் இந்த 4 வகைகள் தவிர இன்னும் ஓர்வகைஇரத்தப்பிரிவு இருப்பதுமும்பையில் கண்டுபிடிக்கப்பட்டது.

மும்பையைச் சேர்ந்தவரிடம் இந்தஇரத்தப்பிரிவுஇனம் காணப்பட்டதனால் 'பொம்பே' எனப்பெயரிடப்பட்டது.

இவ் இரத்தப்பிரிவு உடையவர்களுக்கு மற்றைய 4 இல் ஏதாவது ஒன்றினை சேர்த்தாலும் மரணம் ஏற்படும்.

உலகத்திலேயேஇந்தஇரத்தவகை 135 பேரிடம் மட்டுமே உள்ளதும் இதில் 20 பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## விநாயகருக்கு செருப்பு மாலை

### பொறுப்பற்றவர்கள் விஷமத்தனம்

(சென்னை)

சத்தியமங்கலம் அரசமர விநாயகருக்கு செருப்பு மாலை அணிவித்தமை மற்றும் அருகிருந்த பத்ரகாளி அம்பாள் ஆலய முனியப்பர் சிலை அடித்து நொருக்கப்பட்ட சம்பவங்களானது, அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி பகுதி மக்களின் குலதெய்வங்களாகப் போற்றப்பட்டுவரும் கடவுளுக்கு நேர்ந்த இக்கதி குறித்து மக்கள் அதிருப்தியும் ஆத்திரமும் வேதனையும் அடைந்துள்ளனர்.

இதனையடுத்து கலவரங்கள் நடக்காவண்ணம் தடுப்பதற்கு அங்கு பெருமளவு பொலிஸார் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இச்சம்பவத்தின் பின்னணியில் களுத்தூர் மணி தலைமையில் இயங்கும் பெரியார் திராவிடக்கழகத்திற்குத் தொடர்பிருப்பதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (உ)

## பஸ் விபத்தில் 16 பேர் பலி

(தெஹ்ரான்)

ஈரானின் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பஸ் விபத்தொன்றில் பதினாறு பேர் கொல்லப்பட்டதுடன் இருபத்தெட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

பஸ் வண்டி ஒன்று, இன்னும் ஒரு பஸ் வண்டியின் பின்புறம் மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. (செ)

## பலஸ்தீனரை விடுவிக்க இஸ்ரேல் இணக்கம்

(பெய்ருத்)

யுத்தக் கைதிகளை பரிமாற்றம் செய்யும் போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பலஸ்தீனர்களையும் விடுவிப்பதற்கு இஸ்ரேல் இணங்கியுள்ளதாக ஹிஸ்புல்லாஹ் அமைப்பு அறிவித்துள்ளது.

இஸ்ரேல் கொள்கையளவில் இணங்கிய போதும் விடுவிக்கப்படும், கைதிகளின் எண்ணிக்கை குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

மூன்றாம் தரப்பு உதவியுடனேயே கைதிகள் பரிமாற்றம் சம்பந்தமான பேச்சுவார்த்தையில் ஹிஸ்புல்லாவும் இஸ்ரேலும் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## இஸ்ரேல்படையினரால் நப்ருதீவில் தாக்குதல்

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய இராணுவத்தினர் நேற்று பலஸ்தீனமேற்கு கரை நகரான நப்ருதீவில் ஏவுகணைத் தாக்குதலைமேற்கொண்டுள்ளனர்.

இதனால்பலஸ்தீன அதிகார சபைக்கட்டடம், அரசாங்க கட்டடம் மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவை பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

யூதக்குடியேற்றத்தின் மீது மேற்கொள்ளப்பட்டதற்கொலைக்குண்டுத் தாக்குதலுக்குப் பதிலாகவே இவ் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (செ)

தெரிதலும் தேர்ந்துசெயலும் ஒருதலையாச்
சொல்லலும்வல்லது அமைச்சு

- குறள்

வலம்புரி

## ஜனாதிபதியின் விழிப்பு

சமாதான முயற்சி தொடர்பான விடயங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மிக விழிப்பாக நடந்து கொள்வதை அவரின் அண்மைக் கால நடவடிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

★ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் விரும்பினால் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு தன்னுடன்இணக்கப்பாடு கண்டால் புரிந்துணர்வு உடன்பாட்டில் கைச்சாத்திடத் தயாராக இருக்கிறேன்.

★ எனது சமாதான முயற்சிகளை ஐக்கியதேசியக் கட்சி குழப்பியடித்தது போல் நான் புதிய அரசின் சமாதான முயற்சிகளைக் குழப்பமாட்டேன்.

★ சமாதானமுயற்சியைக் குழப்பும் வகையில் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களை பொது ஜன ஐக்கிய முன்னணியினர் மேற்கொள்ளக்கூடாது.

போன்றகருத்துக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அண்மைக் காலமாக வெளியிட்டு வருகிறார்.

ஜனாதிபதியின் இத்தகைய கருத்துக்களை இரண்டு வகையில் சிந்திக்க முடியும்.

அதில் ஒன்று உண்மையிலேயே சமாதானத்தின் பால் ஜனாதிபதி கொண்ட விசுவாசம். மற்றயது இச் சமாதான முயற்சி எவ்வகையிலும் வெற்றிதரப் போவதில்லை இதில் ஏடாகூடமாக கதைத்து சமாதான முயற்சியைஜனாதிபதியே குழப்பியதாக புதிய அரசு வெளிப்படுத்தும் குற்றச்சாட்டில் இருந்து தப்பிக் கொள்வதற்காக என எடுத்துக் கொள்ளலாம்.

எதுவாயினும் சமாதானத்தை அடையத்தவறியதன் விளைவாக ஒருவருடத்திற்குள் தனதுகட்சியின்ஆட்சிகவுண்டுபோனதும் தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டியதும் ஜனாதிபதியின் அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத சம்பவங்களாகும்.

இத்தகைய ஓர் சூழ்நிலையில் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை புதிய அரசு கொண்டு வரும் சந்தர்ப்பத்தை தானே ஏற்படுத்திக் கொடுப்பது தனது அரசிபயணத்திற்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும். என்பதால் ஜனாதிபதி விழிப்பாகவுள்ளார்.

# முடிமக்கள் கதைகளையே கற்றுவந்தவர்கள்

# குடிமக்கள் காப்பியமாம் சிலம்பு கண்டனர்

என் இளமைக்காலவாழ்க்கையை நினைக்க, நினைக்க இனிக்கிறது. இளமையிற் கேட்டகதைகளை நினைத்தாலும்இன்பமன்றோபொங்குகிறதுமின்சாரவிளக்குகள்வருவதற்கு முன் மினுக்கு, மினுக்கு என மின்னும் பூச்சிகளோடு தெருவிளக்குகள் போட்டியிடும் காலம் அது. அதிலும் ஓர் அழகு. ஓர் இன்பம், பொழுது சாய்ந்ததும் ஊர் அடங்கிவிடும். எங்கும் நிறைந்தபெருமௌனம் ஒன்றே! அமைதி பொங்கும் இரவில் இன்பம் கூத்தாடும். மாலைஆறுமணிக்கெல்லாம் சோறு முடிந்துவிடும். நடுவாயிலினை அடுத்துள்ள அறையில் குழந்தைகள் எல்லாரும்கூடிவிடுவோம். எங்கள் வீட்டின் பழைய வேலையாளைச் சுற்றி 'நாயனார், நாயனார் ஒருகதை, ஒருகதை என்று அன்பு கனியக் கூறிச் சூழ்ந்து கொள்வோம். கதை உலகிற் புகுந்து நகையாடுவோம். இருட்டினை மறப்போம். வீட்டினை மறப்போம் இந்த உலகினையே மறப்போம். அரசனும், அரசியும், வீரரும், சூரரும், பொன்னும், மணியும், அழகும், கடவுளும், பேசும் விலங்குகளும், பாடும் மரங்களும் எங்களைச் சுற்றிச் சுற்றிவர, அந்தச் சித்தருலகில் யாங்களும் ஒருவராய் வாழ்வோம். எப்போதும் 'ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார்' என்றே அந்த வேலையாள் கதை கூறத் தொடங்குவது வழக்கம் ஆம் அரசர் தவிர வேறு எவரும், மனத்து எதிர்வரக் காணோம். என்ன -என்ன கதைகள் என இப்போதுஎண்ணிப் பார்க்கிறேன். விக்கிரமாதித்தன் கதை, மதனகாமராசன் கதை, திருவிளையாடல்கள், நளன் கதை, அரிச்சந்திரன் கதை, துரியோதனன் கதை, இராமர் கதை எல்லாம் முடி மக்கள் கதைகளே, குடிமக்கள் கதையொன்றும் கேட்டதாக நினைவுக்கு வரவில்லை. குடிமக்களைப்பற்றி எண்ணுதற்கே இடம் இல்லாமற் போய் விட்டது. இன்று நினைத்தால் பெரிய வியப்பாகத் தோன்றுகிறது.

### கதை என்றாலே முடிமக்கள் கதை தான்

பின்பு பள்ளியிலும், கல்லூரியிலும் கற்றும் கேட்டும் வந்த கதைகளும் முடிமக்கள் கதைகள் அல்லவா? இராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம், நளவெண்பா, நைடதம் என்பவையே எப்போதும் பாடமாக வரும். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் என்றால் அரசர்களைப் பற்றிய நாடகங்களே பாடமாக வரும். வரலாறு என்றாலும் அரசர்கள் வரலாறன்றி வேறொன்றும் வரலாறாக அன்று தோன்றுவதே இல்லை, எங்களைக் கதை எழுதச்சொன்ன போதும், ''ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான்'' என்றுஎழுதத்தொடங்கியதாகவே நினைவிற்கு வருகிறது. முன்னர் இருந்த நிலை இது. இதன் பின்னரே பாட்டாளி உலகம் பிறந்து வளர்ந்துள்ளது. பாட்டாளி என்ற சொல்லே வழங்காத காலம் அது.

தமிழில் மட்டுமா இந்த நிலை இருந்துவந்தது? உலகம் தோன்றியதிலிருந்து உலகம் முழுதும் கதை என்றாலேமுடிமக்கள்கதைதான். வடமொழியில்ஆதிகாவியம் என்றுபுகழப்பெறுவது வான்மீகியின் இராமாயணமே. கிரேக்கர்பழங்காப்பியம் எனப்பாராட்டுவது ஹோமர் பாடிய இலியட்என்பதேயாம். மெனலஸ் என்ற அரசர் பெருமானின் அழகிய மனைவியாம் ஹெலன்பெருமாட்டியைப் பாரிஸ் என்ற இலிய நாட்டு இளவரசன் சிறை எடுத்ததால் மூண்ட போரினையே பாடுகிறது. அந்தப்பழங்காப்பியம் வர்ஜில் என்றபாவாணர்பாடியஈனிட் என்பதே இலத்தீன் மொழியின் பழங்காப்பியமாகும். உரோமப்பேரரசினைத் தோற்றுவித்த ஈனியஸ் என்ற அரசர் பெருமானது வரலாற்றினைக் கூறவேஅக்காப்பியம் எழுந்தது. இவ்வாறுஎந்த நாட்டுப்பழங்காப்பியத்தினை ஆராய்ந்தாலும் அரசர் அல்லது வீரரினது வரலாற்றினையே பாடிப் புகழக்காண்கின்றோம்.

வித்துவான்

**தெ. பொ. மீனாட்சிசுந்தரம்**

M. A., M.O.L., B.L.

### குடியரசுக்காலம்

முடியரசர்கள் காலம் ஏறக்குறைய முடிந்து விட்டது என்றே சொல்லி விடலாம். இது குடியரசுக்காலம். அது மட்டுமா? முதலாளியென்று புகழ்ந்ததெல்லாம் மலையேறிப் போய் விட்டதன்றோ?

பாட்டாளி என்ற சொல்லே பாட்டைப் போலஇனிக்கின்ற காலம் இது. இத்தகைய நாளில், முடிமக்களைப் பற்றிப் பாடிய நூல்களின் வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முயல்வது வியப்பு அன்று. அண்மையில் தமிழ் இலக்கியத்தினை ஆராய எண்ணிய இளைய அறிஞர் சிலர், முதலாளி இலக்கியமும் முடிமக்கள் இலக்கியமும் அன்றிக்குடிமக்கள் இலக்கியம் என ஏதேனும் உண்டா? என்று நெஞ்சம் குமுறுகின்றனர், குறம் பாடினாலும் அது மீனாட்சி குறமாக முடிகிறது. குறவஞ்சி பாடினாலும், அது சரபேந்திரர் குறவஞ்சியாக நீண்டு செல்கிறது.

### சிலப்பதிகாரம்

ஆனால் பெரியோரை வியத்தலும் இலமே. சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே என்று பழந்தமிழன் பாடியுள்ளது நினைவிற்கு வருகிறது. இப்பழந்தமிழன் வாய் பந்தல் போடுகிறானா? உண்மையைத் தான் கூறுகிறானா? எண்ணித்தான் பார்ப்போமே. தமிழில் ஆதிகாவியம் எது? பாரதமா? அது பின்னாளில் எழுந்தது இராமாயணமா? அது கம்பனால் ஒளிபெற்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் முதல்முதலாகத் தோன்றியது சிலப்பதிகாரமே ஆகும். அது யாருடைய கதை? அங்கே சோழன் கரிகாலன் வருகிறான். ஆனால் அவனுடைய கதையன்று. பாண்டியன் நெடுஞ்செழியன் அரசு கட்டிலில் வீற்றிருக்கிறான். கண்ணகி எதிரே உயிர் விடுகின்றான். ஆனால் அவன் கதையுமன்று. சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் போர்புரிகின்றான். கண்ணகிக்குக் கோயில் கட்ட இமயத்திலிருந்து கல் எடுத்து வருகின்றான். ஆனால், அவன் கதையுமன்று. முரசு முழங்குதானை மூவரும் கதையில் வந்தும், அந்த முடிமக்கள் கதையாகச் சிலப்பதிகாரம் விளங்கவில்லை. குடிமக்களில் ஒருவர் கதைதான் அது. அதிலும் ஒரு பெண்ணின் கதை. கண்ணகியின் கதையன்றோ சிலப்பதிகாரம். கோவலன் குடிமக்களில் ஒருவன். மாதவி பரத்தையில் ஒருத்தி. இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரச் சித்திரம்.

இது நாம் வேறு எங்கும் காணாத ஒரு வியப்பு. முடிமக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகப் பிறநாடுகளில் எல்லாம் அமைந்து விளங்க, குடிமக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகத் தமிழ் நாட்டில் அமைந்து விளங்குகின்றது' குடியரசு உலகிலும் இந்த காப்பியத்தைபாராட்டடம் உண்டு. பாட்டாளி உலகமும் இதனைப் பரிவுடன் வரவேற்கும். ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வேட்டுவ வரி, என்று பாட்டாளிகளைப் பாடுவதில், சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! எவ்வளவு களிப்பு! முரசு முழங்குதானை முடிமக்கள் மூவரும் தமிழ் நாட்டின் ஒருமைப் பாட்டினைச் சிதைத்து வந்தனர் குடி மக்கள் வழியாகவே தமிழ் நாட்டின் ஒருமை ஓங்கிவளரக் காண்கின்றார். இளங்கோவடிகள், சோழநாட்டில் பிறக்கின்றாள் கண்ணகி, பாண்டிய நாட்டில் கணவனைஇழக்கின்றாள், சேர நாட்டில்தெய்வம் ஆகின்றாள். மூவேந்தர் பேராசையால், முப்பெருந்துண்டாய், வெட்டுண்டு கிடக்கும் தமிழ் அன்னை, கண்ணகியின் வாழ்க்கை வழியே ஓர் உருவாய் உயிர் பெற்று விளங்குகின்றாள்.

### புரட்சி

என்வாழ் நாளுக்குள்ளேயே ஒருபுரட்சியைக்காண்கிறேன். முடிமக்கள் பற்றிய கதையைக் கேட்டும்எழுதியும் வந்த நானே குடிமக்கள் கதையைக் கேட்டும் எழுதியும் வந்தேன். என் இளமை நாட்களில் இதனை நான் நம்பியிருக்க முடியாது. ஆனால் ஏறக்குறைய இரண்டராயிம் ஆண்டுகளுக்குமுன்னரே, இதனை நம்பினார் இளங்கோவடிகள். அரசர்குடியிற் பிறந்தது மட்டுமா அரச செல்வத்தில் வாழ்ந்தவர் நம்பினார், நம்பியது? நம்பியபடி குடிமக்கள் கதையினைக் காப்பியமாக எழுதினார். எழுதியது மட்டுமா? தாம் எழுதியபடி தமிழ் நாடும் அந்தக் காப்பியத்தை அன்று முதல் இன்று வரை பாடும் படியும் செய்துவிட்டார்.

இளங்கோ வடிகள் செய்த புரட்சி பெரிதன்றோ? சங்க காலமே ஒரு புரட்சிக் காலம். அக்காலப் புலவர்கள் பழமைக்கு அடிமையாகாது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## குணசீலம்

நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்.

- அப்பர்

என்னைக் குண சீலனாக்குவதே செம் பொருளினிடத்து நான் சமர்ப்பிக்கும் நிவேதனமாகுக.

நாள் ஏற ஏற யாருடைய மனது படிப்படியாகத் திருந்தியமைகிறதோ அம்மனிதனே மெய்வாழ்வு வாழ்கிறான். மானுடப் பிறவி எடுத்ததன் நோக்கம் தன்னைக் குணவான் ஆக்குதற் பொருட்டேயாம். ஒவ்வொரு செயலும்எண்ணமும்மனிதனைமாற்றியமைத்து வருகிறது. நற்செயலும், நன்மொழியும், நல்லெண்ணமும் சேர்ந்து மனிதனைக் குணவான் ஆக்குகின்றன.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (6)

மனித சமூகங்களிலே தீர்ப்புகள் எல்லா நேரங்களிலும் நீதியை நிலைநாட்டுவதில்லை. நீதித்துறையில் நுழைகின்ற நீதியற்ற மனிதர்களால் அநியாயங்கள் நியாயப்படுத்தப்படுகின்றன. அநீதியாளர்கள் சரியான சாட்சியின்றி நிரபராதிகளாகவும், நிரபராதிகள் போலியான சாட்சி மூலம் குற்றவாளிகளாகவும்ஆக்கப்படும் கொடுமைகள் நடக்காமல் இல்லை. இன்றைய இறைவார்த்தை இறுதித் தீர்ப்பின் காட்சியை நம்கண் முன் விவரிக்கிறது. இங்கு மாட்சிமையில் வரும் இறைமகனே நீதியாக வருகிறார்.

எவ்வித வேறுபாடுமின்றி மனிதர்களின் பிறரன்புச் செயல்களே சாட்சிகளாகி, மனித சமூகமே இதனடிப்படையில்இறையரசுக்குஉரியவர்கள், இறையரசின் எதிரிகள் எனப் பிரிவதைக் காண்கின்றோம். பிறரது தேவைகளை உணராதவர்கள் மனிதர்களே அல்லர். மக்களில் பெரும்பான்மையினர் நம் அன்பிற்காக, உதவிக்காக வேதனையோடு காத்திருக்கின்றனர். ஏழைகளுக்குச் செய்பவையெல்லாம் இறைவனுக்கே என்பதை ஏற்று பிறர் நலம் பேணுவோம். முக மலரும் ஏழைகளில் இறைவனின் தரிசனம் காண்போம்.

-காவலன்

# நேபாளத்தில் தீவிரவாதிகள் மும்முனைத் தாக்குதல்!

## 128 பேர் கொல்லப்பட்டனர்

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோஷ் தீவிரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் சுமார் 128 பேர் கொல்லப்பட்டனர்.

நேபாளத்தின் வடமேற்கே உள்ள நிர்வாக அலுவலகம், வடகிழக்கே உள்ள சண்டேபகா விமான நிலையம்' மற்றும் அசார் பொலிஸ் நிலையம் ஆகிய இடங்கள் மீது இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு ஆரம்பமான இத்தாக்குதலில் மாவட்ட அதிகாரி, நேபாள மத்திய புலனாய்வு அதிகாரி, அவரது பாரியார் உட்பட 128 பேர் கொல்லப்பட்டுள்ளதாக நேபாளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களில் 48 இராணுவத்தினர், சுமார் 75 பொலிஸார் மற்றும் நான்கு அதிகாரிகள் அடங்குவர்.

இத்தாக்குதலில் 50ற்கு மேற்பட்ட மாவோஷ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக நேபாள அரசு அறிவித்துள்ளது.

நடைபெற்ற இத்தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பது பற்றி காத்மண்டுவில் அமைச்சரவை அவசரமாகக் கூடி ஆராய்ந்து வருகிறது.

இதேவேளை, கடந்த பதினைந்து நாட்களுக்கு முன்னர் தீவிரவாதிகள் தாக்கியதில், 16 பொலிஸார் உயிரிழந்தனர். மாவோஷ் தீவிரவாதத்தை நாடு தழுவிய ரீதியில் தடுப்பதற்கான அவசரகாலப் பிரகடனத்தை நேபாள அரசு கொண்டுவந்த பின்னர் இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளமை நேபாள அரசியலை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(ந-4)

## அருட்தந்தை அதிரியான் காலமானார்

(யாழ்ப்பாணம்)

விவிலியப் பேராசிரியர் அருட்தந்தை அதிரியான் யோசப் அ.ம.தி. நேற்று இறைபதம் அடைந்து விட்டார்.

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், 1951 ஆம் ஆண்டு அருட்பணியாளராக திருநிலைப் படுத்தப்பட்டார்.

இவரது பூதவுடல் இன்று கொழும்புத்துறை புனிதவளனார் தேவாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 4.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். (இ)

## பிரதமர் இன்று நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சிங்கப்பூர் சென்றிருந்த ரணில் இன்று கொழும்பு திரும்புகின்றார்.

கொழும்பு திரும்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உள்ளுராட்சி தேர்தல் திருத்த மசோதா தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் விளக்கம் அளிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## புலிகளின் தடையை...

### இயல்பு நிலையை உருவாக்க அரசு உறுதியளித்துள்ளது

இரு தரப்பும் ஏற்றுக் கொண்ட போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதன் பின்னர் வடக்குக் கிழக்கில் இயல்பு நிலையை உருவாக்க சிறீலங்கா அரசு மேலும் பல நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பொருளாதாரத் தடைகள், மீன்பிடித்தடைகள் முற்றாக நீக்கப்பட வேண்டும். குறிப்பாக எமது மீனவமக்கள் தமக்குரித்தான தமிழீழக் கடற்பரப்பில் எவ்வித தடைகள் கட்டுப்பாடுகளுமின்றி, சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் குடாநாட்டுக்கான தரைப் பாதை திறந்து விடப்படவேண்டும். புவியியல் ரீதியாக யாழ்ப்பாணமும் வன்னியும் பிணைக்கப்பட்டு, பொதுமக்களும் ஆயுதம் தரிக்காத எமது அரசியல் போராளிகளும் இப்பாதை ஊடாக சுதந்திரமாக போக்குவரத்தை செய்யும் வாய்ப்பு ஏற்பட வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னியுடனும் தென் இலங்கையுடனும் தரைமார்க்கமாக இணைக்கப்பட்டால் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள எமது மக்களின் சமூக, பொருளாதார, போக்குவரத்துச் சிக்கல்களுக்கு தீர்வு ஏற்படும்.

''இவற்றை எல்லாம் படிப்படியாக செய்வதாக அரசாங்கம் எமக்கு உறுதியளித்திருக்கிறது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் எமது போராளிகளின் சுதந்திர நடமாட்டம், ஆயுதம் தரிக்காத இராணுவத்தினர் கண்டி வீதியால் வன்னியூடாக தென்னிலங்கை செல்வதற்கான அனுமதி, யாழ்ப்பாணத்திற்கான பாதை திறப்பு, மீன் பிடி மீதான பூரண தடை நீக்கம், ஆகிய விடயங்கள் ஒரு கால அட்டவணையில் அதாவது ஒரு சில மாதங்களுக்குள் தீர்த்து வைக்க அரசு இணங்கியுள்ளது. இக்கால அட்டவணை போர் நிறுத்த உடன்பாட்டின் முக்கிய அம்சமாக சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே நிரந்தர போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதும் ஒரு குறுகிய காலத்திற்குள் இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு

### புலிகள் மீதான தடை நீக்கப் படவேண்டும்

அடுத்த முக்கியமான விடயம் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம். எமது இயக்கம் மீதான தடை நீக்கப்பட்டு எமது விடுதலை அமைப்பை தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்று எமக்கு சட்ட பூர்வமான, சமத்துவமான அந்தஸ்து வழங்கப்பட்டால் அன்றி நாம் பேச்சுக்களில் பங்கு பற்றப் போவதில்லை இது எமது உறுதியான நிலைப்பாடு.

### மாலை தீவில் பேச முடியாது

மாலைதீவில் மருத்துவ வசதிகள் இல்லாததால் அங்கு பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதை நாம் விரும்பவில்லை தென் இந்தியா உகந்த இடம். எல்லா வசதிகளுக்கும் ஏதுவான இடம். இந்திய மண்ணில் சமாதானத்திற்கான பேச்சு நிகழ்வதை நாம் விரும்புகிறோம். இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு உதவுவது பிரதேச வல்லரசு என்ற ரீதியில் இந்தியாவுக்கு ஒரு கடப்பாடு உண்டு. பேச்சுவார்த்தைக்கு தளம் அமைத்துக் கொடுப்பது பற்றி மத்திய அரசு இன்னமும் முடிவு எடுக்கவில்லை சில வேளைகளில் நல்ல முடிவு எடுக்கலாம்.

சமாதானப் பாதைக்கு இந்தியா கதவடைத்து விடுமாயின் நாம் வேறு இடம் பற்றி சிந்திக்கலாம். எனினும் அதற்குக் காலம் இருக்கிறது. என்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (வ)

## யாழ் குடாநாட்டு...

விடுதலைப்புலிகள் பாதை திறப்பதற்கு பச்சைக்கொடி காட்டியிருப்பது படைத்தரப்புக்கு அதிருப்தியையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது. படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். குடாநாட்டின் பாதுகாப்பிற்கு பாதை திறப்பதன் மூலம் அச்சுறுத்தல் ஏற்படலாமென படைத்தரப்புக் கருதுவதே இவ் வெறுப்புக்கு காரணம் எனவும் தெரியவருகிறது.

இந் நிலையில் குடாநாட்டுக்கான பாதையை தென்மராட்சிப் பகுதியின் முன்னரங்க நிலையான எழுதுமட்டுவாள் பகுதியில் இருந்து திறப்பதில் அரசுக்கு நெருக்கடிகள் தேன்றியுள்ளது. (இ)

## மாணவி...

வந்த யாழ். மாவட்ட அரசியல் தலைவர்கள், கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் இது விடயத்தில் மட்டும் வாய்மூடி மௌனிகளாகி விட்டமை பெரும் வேதனையையும் வியப்பையும் அளிப்பதாகவும், நீதிக்கு அப்பால் இவர்கள் கைக்கூலிகளாகி விட்டதாகவும் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த யாழ். மாவட்ட எம்.பி என். ரவிராஜ் மற்றும் யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகிய இருவரும் மல்லாகச் சம்பவம் குறித்து வேதனையும் கண்டனமும் தெரிவித்ததுடன் இவ் விடயம் குறித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப் போவதாகவும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வலம்புரிப் பத்திரிகை இச்சம்பவத்தை துணிச்சலுடன் வெளிப்படுத்தியதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றவாளி தண்டிக்கப்படவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன் இத்தகைய சம்பவங்கள் தொடராமல் தடுக்கப் படவும் உதவும் என பலதரப்பும் பாராட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## பாலியல்...

அளித்து செய்தியாக வெளியிட்டன.

எனினும் குடாநாட்டில் செய்திகளை துலாம்பரமாக வெளியிடும் பி.பி.ஸி மாத்திரம் இதனை வெளியிடாமல் சர்வதேசத்திற்கு மூடிமறைக்க முற்பட்டுள்ளது. இது இவ்வாறு இருக்க மல்லாகச் சம்பவத்தை பி.பி.ஸி ஊடாக வெளியிடாமல் தடுக்க யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர் ஒருவர் கடுமையாக பிரயத்தனம் எடுத்ததாகவும் அதன் அடிப்படையில் பி.பி.ஸி க்கு யாழ்ப்பாணச் செய்திகளை வழங்கும் வவுனியாச் செய்தியாளர் ஒருவர் திட்டமிட்டு மல்லாகச் சம்பவத்தை இருட்டடிப்புச் செய்துள்ளார் எனவும் செய்திகள் கசியத் தொடங்கியுள்ளன. (இ)


## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணி மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, துணை வேந்தர் அவர்களும் விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொள்ளும் வகையில் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**காலம்: நாளை (19.02.2002) செவ்வாய்க்கிழமை**

**நேரம்: மாலை 4.00 மணி**

**இடம்: வணிகத்துறை விரிவுரை மண்டபம்**

அனைத்து விளையாட்டு அணி மாணவர்களையும் இக் கலந்துரையாடலில் பங்கு கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- செயலாளர் -

யாழ். பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம்

[4706]

உள்நாட்டு, வெளிநாட்டு
தொலைபேசி சேவையை
மிகக் குறைந்த கட்டணத்தில்
பெற்றுக் கொள்ள

வேணுசங்கர் கொமினிக்கேசன்

மானிப்பாய் வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தொலைபேசி இல: 070-21-2988

[C/3556]


# மரண அறிவித்தல்கள்

## விவிலிய பேராசிரியர் அருள்தந்தை அதிரியான் யோசப் (அ. ம. தி.)

விவிலியப் பேராசிரியர் அருள்தந்தை அதிரியான் யோசப் அ.ம.தி. அவர்கள் நேற்று (17.02.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை அமல உற்பவ இல்லத்தில் இறைபதம் அடைந்தார்.

அலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருள்தந்தை அவர்கள் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1951 ஆம் ஆண்டு அருள்பணியாளனாக திருநிலைப்படுத்தப்பெற்று புனித லூசியா பேராலயம் (கொழும்பு), கொச்சிக்கடை, கடற்கரைத்தெரு (நீர்கொழும்பு) ஆகிய பங்குகளில் பணியாற்றியுள்ளார். நுகேகொட புனிதவளனார் குருமடம், கொழும்புத்துறை புனிதவளனார் குருமடம் ஆகியவற்றின் அதிபராகவும், கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட ஆன்மீக குருவாகவும், விவிலியப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

அமரரான அடிகளாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கொழும்புத்துறை புனிதவளனார் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை (18.02.2002) பிற்பகல் 2.30 மணிவரை வைக்கப்படும். பின்னர் மாலை 4.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
அருள்திரு. போல் நட்சத்திரம் (அ.ம.தி.)

'தொடர்பகம்'
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/3554)

## முத்து சின்னத்துரை

பத்திரகாளி கோவிலடி, தாவடியைப் பிறப்பிடமாகவும், நீதிராசா வீதி, கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட முத்து சின்னத்துரை நேற்றிரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும், வசந்தகுமார் (இத்தாலி), வசந்தமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராஜாவின் அன்பு மாமனாரும், சுமித்திராவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12.00 மணிக்கு (ப.நே) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.கு. சிவசுப்பிரமணியம்
(மருமகன்)

நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(C/3555)


அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு.......

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.